# பூவரசு

*Poovarasu*



இனிய தமிழ் ஏடு
இருதிங்கள் ஒன்று.

வைகாசி-ஆனி 1998

## வாழ்த்துகிறோம்!

பரதக்கலையின் புதிய தாரகையாய்
அரங்கினில் வந்தாய் மகளே!
தமிழர் கலைபண் பாட்டினைப் போற்றி
எழுவாய் கலைமக ளெனவே!

நாடும் வீடும் புகழ்ந்திட வளர்க!
நல்லவர் ஆசிகள் சேர்க!
நற்றமிழ்க் கலையின் நாயகி இவளென
நானிலம் போற்றிட உயர்க!

வாழ்த்தும்
**பூவரசு.**



கஸ்தூரி சலங்கை ஒலி
நாட்டியக் கலாமன்ற ஆசிரியை
சாவித்திரி இமானுவல் அவர்களின் மாணவி
**செல்வி அனிந்றா மிருதுளா இராஜகுமாரன்**
அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம்
28.03.98 அன்று சிறப்புற நடைபெற்றது.


# பூவரசு

இனிய தமிழ் ஏடு
இருதிங்கள் ஒன்று.

இதழ்:- 51
வைகாசி-ஆனி 1998

ஆசிரியர்:
இந்துமகேஷ்.

வெளியீடு:
பூவரசு கலை இலக்கியப் பேரவை,
ஜேர்மனி.

Poovarasu
Tamilische Literatur Magazin
Mai-Juni '98.

Herausgeber:
Poovarasu
Kultur und Literatur Organization,
Germany.



முகவரி:
Poovarasu,
Sinniah Maheswaran,
Otto Brenner Allee - 56,
28325 Bremen,
Germany.


**இந்துமலரின் இதழ்கள்.....**

*டென்மார்க்கிலிருந்து*
**வேலணையூர் பொன்னண்ணா**

*மலேஷியாவிலிருந்து*
**ஏ.தேவராஜன்**

*பிரான்ஸிலிருந்து*
**ப.இராஜகாந்தன்**

*ஈழத்திலிருந்து*
**என்.கே.ரகுநாதன்**

*ஜேர்மனியிலிருந்து*
**வீ.ஆர்.வரதராஜா**
**இராஜன் முருகவேல்**
**ஞானக்குமாரன்**
**விஜயா அமலேந்திரன்**
**அவதானி**
**எழிலன்**
**பூனகர் ரவி**

**உலகமே நம் இல்லம்**
**உள்ளமெல்லாம் நம்சொந்தம்**


http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)- 909/09
பொள்ளாச்சி நசன்

# வாழ்த்து மலர்கள்!

*அன்புடையீர்!*
*வணக்கம்.*
*இனிய தமிழ் ஏடு 'பூவரசு'வின் 50வது இதழ் கிடைக்கப் பெற்றேன். மிக்க நன்றி.*
*ஜெர்மனியில் அச்சாகி வருகின்ற 'பூவரசு' இதழ் சிறப்பான தோற்றத்துடன், தரமாக அமைந்துள்ளது மகிழ்ச்சி மிகத் தருகிறது. நல்ல கவிதைகள், கட்டுரைகள், ஆன்மீக நலனுக்கான சிந்தனைகள் .இப்படி பல்சுவை விஷயங்களும் கொண்டு இனிய விருந்தாக விளங்குகிறது 'பூவரசு'.*
*'உபச்சாரம்' என்ற சிறுகதை மனிதர் உறவுகளில் காணப்படுகிற சில யதார்த்தநிலைமைகளை நன்கு சித்தரிக்கிறது. ஜெர்மனியின்* Halle *நகரில் உள்ள ஆவணக்காப்பகத்தில் பாதுகாக்கப்படுகிற தமிழ் சுவடிகள் பற்றிய தகவல் சுவாரசியமானது. ஜெர்மானியர்கள் அந்தக் காலத்திலேயே தமிழ்மொழிமீது காட்டியுள்ள ஆர்வமும் அக்கறையும் உளம் சிலர்க்க வைப்பனவாகும்.*
*'பூவரசு' சிறார்க்கென இளந்தளிர்கள் பகுதியை சிரத்தையுடன் தயாரித்திருப்பது பாராட்டுதலுக்கு உரியது.*
*இப்பகுதியில் உள்ள பாடல்கள், போட்டிகள், கதைகள், கட்டுரைகள் எல்லாம் சிறுவருக்கு சுவைமிகுந்தனவாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.*
*'பூவரசு' எட்டின் ஏழாவது ஆண்டுநிறைவுவிழா 'பூவரசம்பொழுது-98' என்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டிருப்பது சந்தோஷமான விஷயம்.*
*'பலதும் பத்தும்' என்ற தலைப்பில் குறிப்புகள் ரசமாக எழுதப்பட்டிருக்கின்றன.*
*ஜெர்மனியில், அந்நியமான மண்ணில் இருந்துகொண்டு தமிழுக்கும் தமிழ் இதழியலுக்கும் இப்படி ஒரு அருமையான பணியை சிறப்பாக ஆற்றிவரும் 'பூவரசு' அன்பர்கள் அனைவரையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.*
*உங்கள் பணிகள் மேலும் சிறந்து ஓங்குவதாக.*
*வாழ்க 'பூவரசு'*

*அன்பு*
**வல்லிக்கண்ணன்.**
*(சென்னை)*



**பூவரசே! நீவாழி**

எட்டாண்டாய்த் தொடரும் உன்
இலக்கியப் பயணத்தில்
ஈர்த்துவிட்டாய் எங்கள்
இதயங்கள் யாவையுமே

புலம்பெயர்ந்த நாடுகளில்
தமிழ்மணத்தைப் பரப்பிவரும்-உன்
புகழ்பாடி வாழ்த்துகிறேன்!
வாழிய நீ பல்லாண்டு!

இடர்கள்பல தொடர்ந்தாலும்
ஏற்றபணி நிறைவேற்றி
அகம்குளிரும் உந்தனுக்கு
ஆணிவேர் இந்துமகேஷ்!
அவரோடு இணைந்துன்னை
ஆதரிக்க நாங்கள் உண்டு!
தளராதே! தொடர் உந்தன்
சாதனைகள் தொடரட்டும்.

அன்புடன்-
அருள். (சுவிஸ்)

புலம்பெயர்ந்த நிலையிலும்
தங்கள் தமிழ் இலக்கியப்பணிக்கு
எனது உளம் நிறைந்த வாழ்த்துக்கள்.

என்.கே.ரகுநாதன்
(தெகிவளை, இலங்கை)

பூவரசு 50வது இதழை
மலேசிய அருவி இதழ் ஆசிரியர்
திரு. அருண் எனக்கு அனுப்பியிருந்தார்.
சுமார் 80 பக்கங்களில் சிறப்பாக,
வரப்பிரசாதமாகவே பூவரசு இனிய தமிழ்
இருதிங்கள் இதழ் படைக்கப்பட்டுள்ளது.
தொடர்ந்து பூவரசை அனுப்பி வையுங்கள்.
அதன் சுவை நாவில் இன்னும் இனிக்கிறது.
அன்புடன்
**பி.லெட்சுமணன் — கமலாதேவி,**
(ஜொகூர்பாரு, மலேசியா)

# பிரலாப யாகம்.

யாரோ, ஊர் பேர் தெரிவிக்க விரும்பாத ஒருவனால் கயிறு திரிக்கப்பட்டதால் மழையோடு முகம் சுளித்துக்கொண்ட பிரதேசம் அது.
ஈரமனசுக்காரர்களிடம் ஈரவிழிகள்மட்டுமே சகவாசம்.
வயிறுகள் இருக்கும்- பெருங்காய டப்பாக்களாய்!
வினாடிக்கு வினாடி- இந்தப் பழம் நிச்சயமாய் புளிக்காது என்றபடி பசி பெருங்குடலைப் பார்க்கும். வயிறு மூளையிடம் முறையிடும்.
மூளை, முடமான நரம்பு நாளங்களை முற்றுகையிடும்.
பின்பு உச்சந்தலையில் உச்சிவெய்யில் கொட்ட, பார்வையெல்லாம் மேல் பிரபஞ்சத்தை வெறுப்புக்கலந்த விரக்தியில் நோக்கும். வெற்றுத் தோலைப் போர்த்திய ஓடுகளெல்லாம் ஒரு வழக்காடு மன்றத்தில் குற்றம் புரியாத குற்றவாளிகளாய் அபலைகளாய் நிற்கும்.
மண்வெட்டிகளும் கலப்பைகளும் களைப்பை மறந்து ஓய்வு எடுத்துக்கொள்ள கோடைபோட்ட வினோத மடல்தான் அது. ஒப்பந்தத்தை மீறாதவண்ணம், விண்ணுக்கும் மண்ணுக்கும் வைராக்கியம் பிறந்தது.
ஒரு நல்ல அரசு தனது தேர்தல் வாக்குமூலங்களை நிறைவேற்ற முடியாதபடி ஏமாந்து போனது.
"பரிட்சயம் பண்ண இதுவா நேரம்?" என அரசு மௌனமாய்க் குமுறியது.
அந்தக் குமுறல், முனகலாய்த் தென்பட்டது. இயற்கைக்கு!
பஞ்ச பூதங்களுக்குள் ஒன்று தவறிக் காலமாகிவிட்டது போலும்.
இந்த இக்கட்டான சூழலில், சில உயிர்கள் வாழ்க்கையோடு விவாகரத்துச் செய்துகொள்ள எத்தனித்தன.
அத்வைதமே கைவிட்டபடியினால், சில உன்னத ஆத்மாக்கள், உயில்கள் எழுதின தங்கள் சுவாசத்தை.
உடலில் திரவம் சலசலக்காததால், பிராணவாயுவுக்கு அதில் பிரயாணப் செய்யப் பிடிக்கவில்லை.
பலருக்கு ஆச்சரியம். பனிக்கரம் ஆசீர்வதித்த புண்ணிய பூமியில் வறட்சிப் பிரளயமா என்று. பாவம் புரியாத பச்சிளம் யாவும் புழுங்கிப் புரண்டபோது பட்டினியைமட்டுமே தம் பத்தினியாய்ப் பாவித்த ஓர் ஏழை, உறங்கிக் கொண்டிருந்த கலப்பைத் தட்டியெழுப்பினான்.
அவன், கடுகளவும் கற்றிராத ஒரு மனப் பணக்காரன். கைத்தேர்ந்த மருத்துவன்போல் நிலத்தைப் பிரசவம் பார்க்கத் துணிந்தான்.
இந்தப் பிரசவத்தின் புன்னகைதான் இனிப் பலரின் மனிதம்! மாதோயம்!
அவன் முத்தமிடலில் மயங்கியது நிலம்! ஆம்! நிலம் நீர்த்து, அவன் மீண்டுமாய்ப் பூத்தான்! நீரையும் தம் சுற்றத்தையும் ஒப்பீடு செய்தால். இந்தக் கருணையை எல்லா ஆன்மாக்களுக்கும் எப்படிப் பங்கிட்டுக்கொடுப்பது?
கானாவூர் கல்யாணத்தில் இயேசு,தண்ணீரைத் திராட்சை இரசமாய் மாற்றியது மாதிரி. ஓர் அப்பத்தை ஐயாயிரம்பேர் உண்டதுபோல். தம்மால் இந்தக் காரியத்தை நிறைவேற்ற முடியுமா எனச் சிந்தித்தான்.
உடலில் ஒட்டுறவாயிருந்த வியர்வைகள், பக்கபலமாய் உற்சாகமூட்டின.
தோண்டினான், தோண்டினான், தோண்டினான்! நிலத்தின் ஈரப்பதம் வயிற்றில் பால்வார்க்கும் நிலையில் சமிக்ஞை காட்டியது.
ஆறடி, எட்டடிகள் பத்தடிகளாய் பதினைந்தடிகளாய் உள்ளே பயணித்தது!
காப்பு பூத்த நிலையில், மருங்கே நின்றன மேலே காய்ந்த உருவங்கள்!
"தண்ணீர் தண்ணீர்!" சில ஓலங்கள் ஆனந்த இராகங்களைத் தொனித்தன.
கொள்கலன்கள், பண்டபாத்திரங்கள் ஒன்றன்மேல் ஒன்றாய் நின்றன- தங்கள் இரும்பு வயிறுகள் நிரம்பும் என்று. அங்கே ஓர் எதிர்பார்ப்பு புலரியது!
ஆனால், யாவுமே மொள்ளவே திராணியற்றுக் கிடந்தன.
சகல பாத்திரங்களின் முகங்களில் நீந்திய பளபளத்த ஆனந்தம் சன்னஞ் சன்னமாய் ஸ்தம்பித்து. பின்பு அவை நிசப்தமான அஸ்தமனமாயின.
உள்ளே தோண்டிக்கொண்டு போனவன் ஊற்றுக்கும் தாகம் எடுக்கப்பட்டு அந்த நீருக்கு ஆகாரமானான்.
உயிர்விட்ட நிலையில் நீரபரப்பில் முழுமையாய் மிதந்து கொண்டிருந்தான் அவன்.
நீரைநோக்கி எல்லோரது பாத்திரங்களும் கீழே இறங்கின. நீரைத்தொட்டதும் "அவனை"மொள்ளத் துடித்தனர்.

குறிப்பு.— ஒரு வரண்ட பிரதேசத்தின் அனாதைக் கிராமத்தில் தட்டுப்பட்ட கதை.

-வ.தேவராஜன்
(ஜாசின், மலேசியா)

# அன்புள்ள தம்பிக்கு!

உனது கடிதம் கண்டு மகிழ்ச்சியடைந்தேன்.

தமிழீழம் விரைவில் வரவேண்டும். தமிழ்மக்களின் துயர் தீரவேண்டும் என உளப்பூர்வமாக எழுதியிருந்தாய். வாழ்த்துக்களும் வணக்கங்களும் என்றுமே வீண்போகாது. தமிழீழ மக்களின் மன உறுதிக்கு இவைதாம் இன்று உரமாக அமைகின்றன என்றால் அது மிகையாகாது.
அண்மையில் நான் வண.பிதா. ஜெகத் கஸ்பாராஜ் அடிகளாரைச்சந்தித்தேன். இவர் பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து ஒலிபரப்பப்படும் வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பணிப் பொறுப்பாளர்.
தமிழீழத்தின் உண்மைநிலையை உலகுக்கு எடுத்துரைத்துக் கொண்டிருக்கும் வெரித்தாஸ் வானொலியின் சேவை எமக்குத் தேவை. அவருடனான அந்த மென்மையான சந்திப்பை உன்னுடன் பகிர்ந்துகொள்வதில் பயனுண்டு என நான் கருதுகிறேன்.
வண.பிதா கஸ்பாராஜ் அடிகளார் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். தமிழீழத்திற்கு அவர் இதுவரை போகவில்லை. அங்கே போராட்டம் எப்படி நடைபெறுகின்றது மக்கள் எப்படி வாழ்கின்றார்கள் என்பதை அவர் பார்க்கவில்லை. ஆனால் அங்கே போய்ப் பார்த்தவர்களையும் விட மிகத் தத்ரூபமாக எமது மக்களின் நிலையை மிகவும் விரிவாக எடுத்துக் கூறுகின்றார். எப்படி இது சாத்தியம் என உன்னைப்போல நானும் ஆச்சரியமடைந்தேன். அங்கிருந்து வந்த கடிதங்கள் அவரை அப்படிப் பேச வைக்கின்றன. மக்கள் இத்தனை துன்பங்களுக்கு மத்தியிலும் வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பிரிவுக்குக் கடிதங்கள் அனுப்புகிறார்கள்.
அவற்றிலிருந்து எழும் சோககீதங்கள் அவரை தமிழீழத்தின் பக்கம் முழுமையாக இழுத்துள்ளன.

இவர் என்ன இன்று ஒரே சோகத்துள் மூழ்கிவிட்டார் என்று நீ நினைக்கக் கூடுமல்லவா? ஆனால் அங்கிருந்துவந்த கடிதத்தின் சில வாசகங்களைக் கேள்.



'எல்லோருக்கும் வாழ்க்கையில் மரணம்வரும். ஆனால் நாங்கள் மரணத்தில் வாழ்கின்றோம்'
வாழ்க்கையில் துன்பத்தின் சகல எல்லைகளையும் கடந்து வன்னியில் வாழும் ஒரு பெண்ணின் துன்பக்குரலை இறைதூதரின் வாயிலாகக் கேட்கும்போது நாம் எப்படி மகிழ்ச்சியடையமுடியும்?
'இன்று இங்கே ஏற்படும் மரணங்களைப்பற்றியெல்லாம் நாம் கவலைப் படவில்லை. பசி பட்டினியால் வாடும் அந்தத் துன்பத்தையும் தாங்கிக் கொள்கிறோம். ஆனால் அவர்கள் நாளைய விதைகளை அழிக்கிறார்கள். எமது சந்ததி தொடராமல்இருக்க குழந்தைகளையல்லவா அழிக்கின்றார்கள். குழந்தைப்பேறு என்பது பக்குவமாய் பேணப்படவேண்டும். ஆனால் கொட்டும் மழையில் ஒருசில பெண்களின் மறைப்பில் காடுகளுக்கு மத்தியில் ஒரு குழந்தை வன்னியில்பிறந்தது. பிறந்து இரண்டுமணி நேரத்தில் அந்தக் குழந்தை இறந்துவிட்டது. தமிழினத்தின் மற்றொரு விதை அழிக்கப்பட்டு விட்டது.'
நீ வாசித்த இந்த வரிகள் சாதாரணமானவையல்ல.
ஆயிரமாயிரம்வருடங்களாகத் தொடரப்போகும் மனிதவாழ்வில் காப்பியங்களில் இடம்பெறப்போகும் வரிகள் இவை. அங்கு மக்கள்படும் துன்பத்தை அறிந்தாயா?
வண.பிதா கஸ்பாராஜ் அடிகளார் வியூப்பெற்றால் நகரில் நடைபெற்ற அன்னை பூபதி நினைவுநாளில் தமிழீழத்திலிருந்து வந்த சோகக் கடிதங்களை வாசித்துக் காட்டினார். அதைக் கேட்டு மண்டபத்திலிருந்தோர் அனைவருமே அழுதனர். தொடர்ந்தும் அவரின் உரையைக் கேட்காமல் வெளியே வந்துவிடவேண்டும் என்கின்ற அளவுக்கு சோகம் என் இதயத்தை அழுத்தியது.
இத்தனை துன்பங்களுக்கு மத்தியிலும் அந்த மக்கள் அங்கே போராடுகின்றார்கள் என்றால் அதற்கு வைராக்கியம்தான் முக்கிய காரணம் என்கிறார் அடிகளார்.
அவர் கூறிய மற்றொரு விபரத்தையும் கேள்...
'நான் ஒரு முறை கனடா சென்றிருந்தேன். அங்குள்ள தேவாலயமொன்றில் பூசைக்குச் சென்று வெளியே வரும்போது மூன்றுபெண்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் உண்டியல் வைத்துக்கொண்டிருந்தார்கள். அதில் பலர் பணம்போட்டுச் செல்வதை அவதானித்தேன்.
ஒருமணி நேரமாக ஆலயத்தினுள் இருந்து நான் செய்த பிரார்த்தனையை விட இங்கே அவர்கள் செய்யும் சேவை மிகப்பெரிய சேவையாக நான் கருதினேன். இதனை நான் வானொலியிலும் கூறினேன்.

---

**வண.பிதா. ஜெகத் கஸ்பாராஜ் அடிகளாருடன்**
**ஒரு மென்மையான சந்திப்பு**

---

தமிழீழத் தமிழர்களின் துயர் துடைக்க அங்கே பிச்சையெடுக்கின்றார்கள் என்றும் கூறினேன். ஏராளமான கடிதங்கள் தமிழீழத்திலிருந்து வந்திருந்தன. அதில் ஓர் போராளியும் கடிதம் எழுதியிருந்தார்.
'உலகில் எங்களுக்காகவும் குரல்கொடுக்க ஒருவரும் இல்லையே என நினைத்திருந்தேன். ஆனால் இனிமேல் அந்தக் கவலையும் எனக்கில்லை.!' என அவர் அதில் குறிப்பிட்டிருந்தார். துன்பப்படும் அந்த மக்களின் இதயங்களில் ஓரளவு ஆறுதலை புலம்பெயர் வாழ் தமிழ்மக்களாகிய நீங்கள் ஏற்படுத்துகின்றீர்கள்.'என்று ஆழமானதொரு உண்மையை அவர் மிகவும் சர்வ சாதாரணமாகவே கூறினார்.
நோபல் பரிசுபெற்ற அன்னை திரேசாவைப்பற்றி அவர் கூறிய விடயம் எமக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்குமென்பதால் இங்கே அதனையும் குறிப்பிடுகின்றேன்.
"அன்னை தெரேசா அம்மையாரிடம் ஒரு பிராமணத் தம்பதிகள் 70 ஆயிரம் ரூபாவை நன் கொடையாகக் கொடுத்தார்கள். எப்படி இந்தப் பணம் உங்களிடம் வந்தது என அவர்களிடம் அம்மையார் விசாரித்துள்ளார். 'ஐந்து நட்சத்திர ஹோட்டலில் திருமண வைபவத்தை விமரிசையாகக் கொண்டாடவிருந்தோம். ஆனால் அதைத் தவிர்த்து மிகவும் சிக்கனமான முறையில் திருமணத்தை நடாத்திவிட்டு இந்தப் பணத்தைச் சேர்த்தோம்' என அவர்கள் அன்னை தெரேசாவிடம் கூறியுள்ளார்கள். இறைவனின் ஆசீர்வாதம் இவர்களுக்குக் கிடைக்காவிடில் வேறு யாருக்குக் கிடைக்கும்? இறைவனிருக்கும் பரலோகம் செல்லும் தகுதி இவர்களுக்கு இல்லாவிடில் வேறு யாருக்குண்டு என அன்னை தெரேசா கேள்வி எழுப்பினார்."
அவர் கூறிய இந்த தத்துவத்தின் உண்மையை நம்மில் எத்தனைபேர் புரிந்துகொள்ளப் போகின்றார்கள்?
எமது இனம் அங்கே துன்பப்படும்போது நாமும் எம்மை சிக்கனப் படுத்திக்கொண்டு அதனை அங்கே அனுப்பிவைக்க உறுதி கொள்ளலாம் தானே?
நிச்சயமாக நீ இதனைச் செய்வாய் என்பது எனக்குத்தெரியும். ஆனால் எத்தனைபேர் இந்த உறுதியின் பின்னே வரப்போகின்றார்கள்.
"வன்னியில் 7லட்சம் மக்கள் வாழ்வா சாவா எனப் போராடுகின்றார்கள்.அந்த மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு புலம்பெயர்வாழ் தமிழ் மக்களாகிய உங்களுக்குண்டு. வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் 5லட்சம் தமிழர்களும் உதவி செய்ய முன் வருவார்களேயானால் வன்னியில் துன்பப்படும் 7 லட்சம் மக்களும் மகிழ்ச்சியடைவார்கள். உங்களின் பங்களிப்பு இந்தத் தருணத்தில் மிகவும் அவசியமாகின்றது. அதேநேரத்தில் பங்களிப்புடன் பங்கேற்கவும் முன் வருவீர்களேயானால் அங்கு எம்மக்களின் மன உறுதி மேலும் அதிகரிக்கும். தர்மங்கள் அனைத்தும் தோல்வியுறும்போது அங்கே இயற்கை தானே இறங்கிவரும் என்பது



பொதுமரபு. அந்நிலை இப்போது தமிழீழ மக்களுக்கும் ஏற்பட்டுள்ளது. தர்மங்கள் அனைத்தும் தோல்வியுற்ற நிலையில் அங்கும் இயற்கைதானே அந்த மக்களைக் காக்க முன்வரும் என்பது நம்பிக்கை."
வண.பிதா. கஸ்பாராஜ் அடிகளாரின் உரையின் ஒரு சில பகுதிகளை இங்கு நான் உனக்கு எழுதியுள்ளேன்.
உண்மைகள் எங்கிருந்து வந்தாலும் அவற்றை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். எமது சிந்தனை எப்போதும் தமிழீழ மக்களின் மீதே இருக்க வேண்டும் என்பதை நீயும் மறந்துவிடாதே!
அடுத்த கடிதத்தில் மேலும் பல தகவல்களுடன் உன்னைச் சந்திக்கிறேன்.

அன்புடன்
அண்ணன்
வீ.ஆர்.வரதராஜா.

---

# ஏன்?


*எழுத்தாளர்கள் பலர் இன்று எழுதாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?*

ஒருவித பயந்தான். யாழ்ப்பாண எழுத்தாளர்கள் எழுதாமல் இருப்பதற்கு காரணம் ஒன்று தற்கால சூழல் காரணமாக சிக்கல் வந்துவிடலாம் என்பது. இரண்டாவது போராட்டங்கள் கொச்சைப்படுத்தப்பட்டு விடலாம்என்பது. மூன்றாவது சிறு சஞ்சிகைகள் ஏதோ இஸங்களையெல்லாம் சொல்லி எழுத்தாளர்களைப் பயமுறுத்துகின்றன. அதனாலே புதிதாக ஏதாவது எழுதப்போய் உள்ள நல்லபெயரும் போய்விடலாம் என்ற தயக்கம் எழுத்தாளர்களுக்கு இருக்கிறது. அதிலும் இளம் எழுத்தாளர்களுக்கு இப்பத்திரிகைகள் ஏற்படுத்துவது பெரும் சங்கடம். இலக்கியம் என்பது என்ன? சொல்லவிரும்புவதை அழகாகச் சொல்லுவது. அதில் தலையீடுகள் வரும்போது ஒன்றுமே செய்ய முடியாதுபோகும்.ஆனால் நான் இந்த இஸங்களையிட்டு கருத்தில்கொள்ளாமல் நான் எழுதவிரும்புவதை எழுதுகிறேன்.

—எழுத்தாளர் செங்கை ஆழியான்
('தாமரை'க்கு அளித்த பேட்டியில்)



# கூண்டுப் பறவை



கூண்டினுள் சோகமே
வடிவாக அமர்ந்திருந்தன
அப்பறவைகள்.
;லவ்பேர்ட்ஸ்;.-
காதல்பறவைகள்.
கூண்டைத்திறந்து
விரல்களைக் குவித்து,
கையை உள்ளே நீட்ட,
அதில் தாவி
அமர்ந்துகொண்டது காதல்
சோடியில் ஒன்று.
அலகைத் தாழ்த்தி அவனது
கரத்தை மென்மையாய்க்
கொத்தி, மீண்டும் அவனது
முகத்தில் ஏதோ தேடி...
மறுபடியும் கையை உற்றுப்
பார்ப்பதுமாக....
அவனது முகத்தில்(முகிழ்த்த
உணர்ச்சி ரேகைகளையும்,
கரத்தின் ரேகைகளையும்
ஒப்பிட்டு, எதிர்காலத்திற்குப்
பதில் தேடுகிறதோ?
யாரது எதிர்காலம்...?
தனதா...? எனதா....?



-இராஜன் முருகவேல்.



எதிர்காலத்திற்கான கேள்விகளை விதைத்துச் சென்ற யாழினியின் தாக்கம்... அவள் தானே உருவாக்கி, வளர்த்து, தீர்மானித்து, முடிந்தமுடிவாய் அவனின் நிம்மதியைமுடித்த செயலுக்குப் பரிகாரம் உண்டா என அப் பறவை கேட்கிறதா?

அவனது கண்கள் கலங்கின. மனம் நெகிழ்ந்தது. கன்னங்களில் வழிந்த நீர்த்துளிகள் பளபளத்தன. சோர்வும் களைப்பும் கவலைகளும் அவனது முகத்தில் முண்டியடித்தன.

அந்தப் பறவை அவனது முகத்தை உற்றுநோக்குவதைப் பார்க்கையில் உலர்ந்துபோன உள்ளத்து உணர்வுகளையும் மீறிச் சிரிக்கத்தோன்றியது. சிரித்தான்.

அந்தப் பறவையை உதட்டோரம் உயர்த்தி உச்சி மோர்ந்தான்.

இப்படித்தான்... அவளும் உற்றுப்பார்ப்பாள். பார்வையில் ஆயிரம் எதிர்பார்ப்புக்கள்... கேள்விகள்...இளக்காரங்கள்...

'கேட்டால்மட்டும் நிறைவேற்றிவிட முடியுமா உன்னால்?'என்ற ஏளனங்கள்... இவை எல்லாமே பட்டும்படாமலும் தொட்டும் தொடாமலும் வெளிக்காட்டும் பார்வை அவனைக் குழப்பி அவனது மனத்தைத் தைக்கும்.

சக்தியின்றேல் சிவம் இல்லை...சிவமின்றேல் சக்தியில்லை.

நானே குடும்பத்தின் ஆணிவேர்.. நீ என்னை வைத்து வாரிசுகளை உருவாக்கி, ஆளாக்கி, உலகத்தில் உனக்கொரு குடும்பமென்று ஒன்றென உலாவருவாய்...அதற்காக என் ஆசைகளை...ஏக்கங்களை.... உணர்வுகளை... எதிர்பார்ப்புக்களை அழித்துவிடாதே... நான் கேட்பதைக் கொடு... மற்றவர்கள் தங்களுக்கெனத் தேடுவதைத்தான் உன்னிடம் நாடுகிறேன்... அவற்றை தேவையில்லாதனவென்று, உனக்கு நீயே உருவாக்கிக்கொண்ட கோட்பாட்டு வட்டத்துக்குள் போட்டு நசுக்கிவிடாதே!

"சாந்தா இண்டைக்கு ரண்டு சோடிக் காப்பு வேண்டினவள்..."என்று பெருமூச்செறிந்தாள் யாழினி.

சாந்தா அதே நகரத்தில் வசிப்பவள்.

"அதுக்கென்ன உம்மட்டைத்தான் இருக்கே!"

"ம்..இருக்கு..ஏதோ இருக்கு. பழைய மொடலிலை...புதிசாய் என்ன இருக்கு... சாந்தா கொடுத்து வைச்சவள்..."

'நாளும் பழசுதான்!'

வாய்வரை வந்தது தொண்டையுள் அமுங்கியது...

புதிசு புதிசாக... சடப்பொருள்கள் சருகாக மறையும்...தோன்றும்...ஒன்று உருவாக, மற்றதுமறையும்... இது உலகவரலாறு..ஆனால் உயிர்களுக்காக... அந்த உயிர்களின் உருவகங்களை, இயல்புகளை வேறுபடுத்தி வித்தியாசப் படுத்தும் மனங்கள் மாறுபடாதவை... மாறுபாடாகத் தெரிந்தாலும் அவை வலிந்தேற்ற வேசங்கள்.... மற்றொன்றின் அடிமைகளானதில் விளைந்த விபரீதங்கள். மனிதமனங்களின் ஊடலும 'கூடலும் தேடலும் சடட்

பொருள்களின் புதுப்புதுத் தோற்றங்களினால் மாற்றீடு செய்யப்படுமெனில்... மனங்கள் சடப்பொருள்களிலும் கேவலமானவையா...?
இது அவளுக்குப் புரியாது.
சடப் பொருள்களுக்கு அவள் சகாயமாகிவிட்டாள்.
"அவையளுக்கு செலவில்லை... வாங்கீனம்... ஒண்டிலை வாறது மற்றொண்டிலை போகத்தானே வேணும்..."
"உங்களுக்கென்ன செலவு...? ஒவ்வொருத்தி ஒவ்வொரு கலியாண வீடு பிறந்தநாள் எண்டு... ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொருசாறி வேண்டுறாளவை..."
"என்ரைநிலைமை தெரியாதே... ஊரிலை அப்பா,அம்மா...அவைக்கே ஒழுங்காய்க் காசனுப்ப முடியேல்லை...."
"அவைக்கு அளவாய் அனுப்பலாந்தானே..."
"அவை என்னை அளந்து வளக்கேல்லை...அளவாய் சாப்பாடு போடேல்லை... கணக்குப் பாத்துப் படிப்பிக்கேல்லை... இண்டைக்கு அந்தக் கஸ்டமான நிலைமையன்னை...இஞ்சையிருந்து அனுப்புற காசு அவேன்ரை சாப்பாட்டைச் சமாளிக்கத்தான் காணும்...கேவலம் உந்த நகையள், சீலையளுக்காக.. அவையளுக்கு அளவுச் சாப்பாடு போடச் சொல்லுறீரோ?.."
"அதுதான் வேணாமெண்டால் பங்களிப்பு எண்டு மாதாமாதம் செலவளிக்கிற காசை நிப்பாட்டலாந்தானை?"
""ஏனப்பா இப்பிடிக் கதைக்கிறீர்?...என்னாலை புண்ணுக்கு மருந்து போடேலாட்டாலும், ஒத்தணம் கொடுக்கிறன்...அதுக்கும் பாக்க இப்ப நகையளும் சீலையளுந்தான் முக்கியமோ?..." என்று எரிச்சலுடன் கேட்டவனைச் சினத்துடன் பார்த்தாள் யாழினி.
யாசகத்திலிருந்துதான் நேசம் ஆரம்பமாகிறது.
'அன்பே!' என்ற அழைப்பிற்கு அன்பு கிடைக்கவேண்டும். அப்போதுதான் அங்கே 'அன்பே!' என்ற அழைப்பில் உறவு உருவாகி, உணர்வாகி, கலந்தோடி வியர்வையில் விரைந்தோடி பாசம் உருமாறி உருவமாகிறது.
யாசிப்பின் பலன் பூச்சியமானால்... சுகமென்ன சொர்க்கமென்ன...?!
உச்சியிலிருந்து தலைகுப்புற விழுந்து வலியெடுத்துத் தவிக்கும் நிலையையும் மிஞ்சிய நரகம்தான் தஞ்சம்.
எனவே யாசகத்தை நீ நசுக்கினால்... யாசிப்பவள் பாதகியானாலும் வியப்பில்லை. பாதிக்கப்பட்டவர்கள்தான் பயங்கரவாதிகளாகிறார்கள்.
"தாலிகட்டின மனைவியின்ரை சின்னச் சின்ன ஆசையளைக் கூடத் தீர்த்து வைக்காதவனெல்லாம் கலியாணங் கட்டக்கூடாது...!"
"இது சின்னச் சின்ன ஆசையில்லை... சின்னன் சின்னனாய் முளைச்சு ஒண்டாய்த் திரண்டு கொண்டிருக்கிற பென்னம் பெரிய ஆசை!"
'உன்னோடை பேசிப்பலனில்லை.. என்ரை ஆசையளைத் தீர்க்க உன்னாலை முடியாது...' என்பதுபோல் வெடுக்கென முகத்தைத் திருப்பியவாறு அங்கிருந்து அகன்றாள் யாழினி...
அவனது பெருமூச்சு அவளைச் சுட விளைந்தது.. முடியவில்லை.
பலமுறைவிட்ட மூச்சுக்களால் கறுத்துக் காய்ச்சுப் போனவன்.



ஆனால் அவள்...?
சக்தி....!! சக்தியின்றேல் சிவமில்லை. நீ அர்த்தநாரீஸ்வரனல்ல... என் உணர்வுகளில் பாதிகேட்டு, உன்னில் பாதிதர. உன்னால் முடியாது. நான் சக்தி... தனிப்பேன்... நானே நான்... நானாகவாழ்வேன்.. தோற்றமும் தெரியாது, முடிவும்தெரியாது என்றானபோது...ஒருபிடி சாம்பரே ஈற்றில் எஞ்சும் என்றான போது...மிஞ்சிக்கிடக்கும் கொஞ்ச நாட்களில் என் உணர்வுகள்... ஆசைகள்... அவற்றுக்குத் தீனிபோட்டு என் எண்ணப்படி நான் வாழுவேன்...வாழ்ந்துக் காட்டுவேன்!
அவள் சொல்லாததைச் செய்துகாட்டினாள்.

அந்தப் பறவைதான் எவ்வளவு அழகு!
கழுத்தில் வரிவரியாகக் கறுத்தக் கோடுகள் மாலைகளாக மனதை மயக்கின. அவனது நாசித் துவாரத்திலிருந்து வெளிவந்த மூச்சுக் காற்றின் உஷ்ணத்தால் மருண்டு இறக்கைகளை ஒடுக்கிக்கொண்ட பறவையை, மெல்லத் தன் நெஞ்சுடன் அணைத்துக் கொண்டபோது, அவன் இதய நாளங்கள் அவளின் பெயரை மீட்டத்தொடங்கியது.
"யாழினி...யாழினி..."
கூண்டுக்குள்ளிருந்த சோடிப்பறவை சிறகுகளைச் சடசடவென அடித்துக் கொண்டு கீச் கீச் எனக் கத்தியது.
அதைக்கண்டு அவனது கரத்திலிருந்த பறவை பரிதாபமாக அவனைப் பார்த்தது.
'இறக்கிவிடன்... என்னை எதிர்பார்த்து ஒரு உயிர் கூண்டுக்குள்ளை தத்தளிக்கிறது' என்று கெஞ்சுவதுபோலிருந்தது அதன் பார்வை.
'நானும்தான் தத்தளிக்கிறன். கூண்டுக்குள்ளை இருந்தல்ல,இந்த வீட்டுக்குள் இருந்து... உனக்குப் புரியுமா?'
புரியாது...ஆறறிவுபெற்ற மனிதஜென்மங்களுக்கே புரியாதபோது உனக்கெங்கே புரியப் போகிறது?
'புரியும்...புரியும்...'
ஏளனமாகச் சிரித்தது கூண்டுப் பறவை.
'உனக்கு நீயே ஆறறிவு இருப்பதாக நினைத்த முடிவு. உனக்கில்லாத அறிவு எனக்குண்டு. இந்தக் கூண்டுக்குள்ளேயே எங்களால் நிம்மதியாக வாழமுடிகிறது...துணையில்லாமல் தனித்து வாழமாட்டோம். ஆனால் நீ... எங்கே உன் துணை...? தனக்கென ஒருவனைத் தேடிப் பறந்துவிட்டாள்... எங்கே உன் நண்பன்... வில்லன்... இன்றுனக்கு வில்லன்....எங்கே உன்னுடைய ஆறுவயது மகள்...அப்பா அப்பா என்று வளையவருவாளே..?! அவள்கூட அம்மாவின் பின்னால் போய்விட்டாள்... அவளும் உன்னை விலத்தி, தப்பானவனை அப்பாவாக்கிவிட்டாளோ?...'
கூண்டுப் பறவை சிறக்கைகயைத்தட்டி அலறியது.

'இப்ப நீ தனிமரம். கட்டிய மனைவி இல்லை. பெற்றெடுத்த மகள் யாமினி இல்லை. இழந்துபோன உறவுகளுக்காய் உருகமட்டும்தான் உன்னால் முடியும்.

'எதிர்பார்க்கவில்லை…யாழினி இப்படிச் செய்வாளெண்டு எதிர்பார்க்கவில்லை.

அன்று…

பிடரியில் வாய்க்கால் அமைக்கும் இரட்டைச்சடைப் பின்னல் தோளில் தவழ, இடுப்பில் பாடப் புத்தகங்களை அணைத்தவாறு சென்று கொண்டிருந்தாள்.

மழை சற்று ஓய்ந்திருந்தது.

குண்டும் குழியுமான வீதியில் தண்ணீர் அருவியாகி, வீதியைச் சம தரையாக்கிக் கொண்டிருந்தது.

ஏதோ சிந்தனையுடன் வந்துகொண்டிருந்தவனின் சைக்கிள் பள்ளத்தில் விழுந்து எகிறித் தடுமாறி அவள்மேல் சாய்ந்தபோது, அவளின் புத்தகங்கள் வீதியில்சிதறுண்ட…அவன் பயந்தவாறு மன்னிப்புக்கேட்டு, சிதறியவைகளைச் சேர்க்க, அவள் கோபமுறாமல் புன்னகைக்க…

அறிமுகத்துக்கு ஆரம்பக் காரணி அது.

அறிமுகம் அர்த்தமாக எதையோ தேடி, எதிலோ தைக்க…

அவர்கள் காதலர்கள்.

பற்றையை நாடி, செத்தையைத் தட்டி இரகசியமாய் ஆரம்பித்து, இரசனைகளில் மூழ்கி, நம்பிக்கை வசனங்களால் துணிந்து நின்று, ஊர் கதைத்து, உற்றம் சேர்ந்து திருமணமாகி, வெளிநாட்டுக்கு வந்து, வாரிசாக ஒன்றையும் தோற்றுவித்த பிறகு… பிரிவு…

சடப்பொருள்களின் மீதுள்ள சகாயம் சல்லாபத்தை விழுங்கி ஏப்பமிட்டு, விபரீத விளைவைத் தோற்றுவிக்க, எங்கிருந்தோ வந்தவன் எத்திப் பறித்த கதையாக…

காதல் வெறும் காமமாய், உறவு வெறும் மாயையாய், அவன்மட்டும் அலங்கோலமாய்….

கூண்டுப்பறவை வீரிட்டுக் கத்திச் சிரித்தது.

எதிர்பார்க்காத பிரிவு.

'மானுடனே! உறவு பிரிவு, பந்தம் பாசம், இவை எதுவுமே உன்கையில் இல்லை. உலகம் ஒரு சக்தியால் சுழல்கின்றது. அதோடொத்து நான் நீ… புல் பூண்டு என இந்த அண்டத்து உயிர்கள், பொருள்கள் யாவுமே அந்தரத்தில் சுழலும்போது…இதுதான் நிலையானது இதுதான் நிரந்தரம் என்று நினைப்பதா உன் ஆறறிவு?!

'நம்பிக்கைதானே வாழ்க்கையின் அஸ்திவாரம்?!'

'நம்பிக்கை… யாரை யார் நம்புவது…? ஆஸ்திகன் கடவுளை நம்புகிறான். நாஸ்திகன் சக்தியை நம்புகிறான். நீ இலட்சியங்களை நம்பினாய். உன் மனைவி நகையை சேலையை நம்பினாள்…அவைகளுக்காக எவனையோ நம்பினாள். உன் உதிரத்தில் உதித்த மகள் தாயை நம்பினாள். ஆக நம்பிக்கைகள் அழிவுக்கா, ஆக்கத்துக்கா வழிவகுக்கிறது…?'

'குழப்பாதை!'

தலையில் அடித்துக்கொண்டான்.

'உலகமே குழப்பம். உலகம் உருண்டை. தன்னைத்தானே சுற்ற ஒருநாள் எடுக்கிறது. அப்படியாயின் விமானங்கள் நகரத் தேவையில்லை… அந்தரத்தில் மேலே எழுந்து, அசையாமல் சிலமணிநேரம் அங்கேயே நின்று, கீழே இறங்கினால், வேறுநாடு வந்துவிடுமா? இது குழப்பமில்லையா? உனது மனைவியின் ஆசைகள் அந்தரத்தில் மேலெழுந்து, ஊசலாடிக் கீழே வந்தபோது, அது இடம் மாறிவிட்டது…'

ஏதோ ஒரு நகைச்சுவையைக் கூறியதுபோல், அந்தப் பறவை கூண்டுக்குள் அங்குமிங்குமாகப் பறந்து திரிந்து அலறி அலறிச் சிரித்தது.

கூண்டை எட்டி உதைத்தான்.

திமிர் திமிர்…

அலறித்துடித்த பறவை, திறந்த கதவின் வழியே வெளியே பறந்து அலுமாரியின்மேல் அமர, அவனது கரத்திலிருந்த பறவையும் தாவி அதன் அருகே அமர்ந்தது.

'அந்தரமான உலகத்தில் நிரந்தரமான உறவுகள்… நல்ல வேடிக்கை… நிரந்தரத்துக்கு நீ விலை கொடுக்கவேண்டும்…இல்லையேல் எல்லாமே அந்தரம்…அந்தரம்…நாளைக்கு உன்ரை மகள் உன்னைப் பார்க்க வரலாம்…அப்பா என்று அழைக்கலாம்….ஆனால் இப்ப அவளுக்கு யார் அப்பா?! நீயா அவனா?…அவளையும் சூழ்நிலையோ மனச்சாட்சியோ விலை கேட்கலாம்…அப்பா ஞாபகம் வரலாம்…அப்போது வருவாள்…'

'வருவாளா?'

'வருவாள்…வருவாள்…அதுவரைக்கும் நீ அவளுக்காக மீண்டும் நம்பிக்கை வைத்து உன்னையே ஏமாற்றிக்கொள்ளப் போகிறாயா?'

பறவை பரிகசித்தது.

காதுகளைப் பொத்திக்கொண்டான்.

'சீ…சனியனே! முன்னுக்குப் பின் முரணாகப் பேசிக் குழப்புகிறாய்!"

மேசையிலிருந்த புத்தகத்தை எடுத்து வீசி எறிந்தான்.

பறவைகள் விலகி ரீவிக்குத் தாவ, அலுமாரிக் கண்ணாடிக்கதவுகள் கலீர் என்ற சத்தத்துடன் சிதறின.

"விசரன்…விசரன்…"

கேலியாகச் சிரித்தன.

"சனியன்களே… என்னையா ஏமாற்றுறீங்கள்…" என்று கத்தியவாறு மேசை விளக்கை எடுத்தெறிய, அது ரீவியை நொறுக்கியது.

'பைத்தியம்…பைத்தியம்…'

காதுகளைப் பொத்திக்கொண்டான்.

மனதில் இனம்புரியாத கொதிப்பு. அந்தக்கொதிப்பில் சிரசு சூடாகி, மூளையே உருகி மெழுகாகி, சொருசொரென்று நெற்றியில் படர்ந்து கண்களை மறைப்பதுபோன்ற பிரமை.

கைகளில் கிடைத்ததை எல்லாம் தூக்கி வீசினான்.


'விசரன்...விசரன்...எங்களையா கூண்டுக்குள் அடைத்துவைத்து அழகு பார்த்தாய்...?! விசரன் விசரன்...பெண்டாட்டி ஓடினதால் விசரன்... மகள் போனதால் விசரன்...விசரன்...இப்படித்தான் கதைப்பார்கள்!"

பறவைகள் உல்லாசமாக வெளியே பறக்கும்போது, அவனது சிரிப்பொலியும் வெளியே நீண்ட நேரமாக ஒலித்தது.

□□□

பூவரசு 7வது ஆண்டு நிறைவுப் போட்டியில்
இரண்டாவது பரிசுபெற்ற சிறுகதை.

---



## அன்பில்லாமல்.....

'அன்பற்ற நீதி நம்மைக்
கடுமையானவராய் ஆக்குகிறது.
அன்பற்ற விசுவாசம் நம்மை
மதவெறியராய் ஆக்குகிறது.
அன்பற்ற அதிகாரம் நம்மைக்
கொடியவராய் ஆக்குகிறது.
அன்பற்ற கடமை நம்மை
பிடிவாதக்காரராய் ஆக்குகிறது.
அன்பற்ற ஒழுங்கு நம்மை
அற்பமானவராய் ஆக்குகிறது!'

—ஓர் அறிஞர்.



# எழுத்தும் எழுத்தாளனும்.

— என்.கே.ரகுநாதன்.

இலக்கியம் என்றால் என்ன?
அதன் பலன் யாது?
சமுதாய வளர்ச்சியில் அதன் பங்களிப்பு எத்தகையது?
இவை யாவும் பழைய கேள்விகள்.
இவற்றுக்கான பதில்களும் காலத்திற்குக் காலம் மாறுபட்டுக்கொண்டு வந்துள்ளன.
ஆனால் இன்றைய உலகின் வலுவுள்ள அரசியல் சமுதாய சித்தாந்தக் கருத்துக்களின் அடிப்படையில், இலக்கியம் மக்கள் மேம்பாட்டுக்கே உரியது என்ற கருத்து முனைப்புக்கொண்டுள்ளதை நாம் அவதானிக்க முடிகிறது.

இலக்கியங்களை நுகர்வோரிடமிருந்தல்ல, அவற்றைப் படைப்போரிடமிருந்தே அவற்றுக்கான வரையறைகள் முன்வைக்கப் படுகின்றன. நுகர்வோர் என்று இங்கே வாசகர்களை மனதில் கொண்டாலும், அரசியல் சமுதாய முன்னேற்றம் கருதி ஒன்றிணைந்து பணியாற்றுவோரின் கருத்துக்களே பெருமளவில் படைப்பாளியை உந்தித்தள்ளுகின்றன.
அரசியல்கட்சிகள் சமூக முன்னேற்ற இயக்கங்கள் என்று நாம் அவற்றை வகைப்படுத்திக் கொள்ளலாம். மதவாதிகள், ஆத்மீக சிந்தனையாளர்களையும் நாம் இவ்வரிசையில் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

மொழிக்கு எழுத்துருவம் ஏற்படாத ஆதிகாலத்தில் மனிதன் வாய்மொழி மூலம் முதலில் தன் தேவைகளை வெளிப்படுத்தினான். பின்னர் தான் கண்டதையும்கேட்டதையும் வெளிப்படுத்தத்தொடங்கி தன் கற்பனைத் திறத்தினால் அவற்றைக் கூட்டிக் குறைத்துச் சொன்னதுடன் கதைகளை இட்டும் கட்டினான். 'இட்டுக்கட்டுதல்' என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். நடக்காதவற்றை நடந்ததாகவும், இல்லாதவற்றை இருந்ததாகவும் எடுத்துச் சொல்வதைத்தான் இட்டுக்கட்டுதல் என அழைக்கின்றோம். இவை நடைபெறக்கூடிய ஊகத்திலிருந்தே எழுவன. இட்டுக்கட்டுதல் எனும் பேச்சு வழக்கு தற்போதும் கிராமங்களில் வழங்கப்படுகின்றது. இந்தச்

சொற்றொடர்தான் எழுத்துலகில் கற்பனை என்ற ஆழமானதும், மூலமானதும், மிகப் பரந்துபட்டதுமான சொல்லாக பரிமாணம் பெற்று வழங்கி வருகின்றது.

மனித வளர்ச்சியில் மிக முக்கியமான பங்களிப்பு மொழிக்குரியதாகும் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. அதேவேளை நாகரீகம் என்று சொல்லப்படுகின்ற பலவிதமான பண்புகளும் மனித வளர்ச்சியின் சின்னங்களே. நாகரீகம் என்று மேலோட்டமாக நடையுடை பாவனைகளால் மனிதர் தம்மை அலங்கரித்துக்கொள்ளுவதை அதாவது வெளித்தோற்றப் பாங்கில் உயர்ந்தமனிதராகத் தம்மைக் காட்டிக்கொள்வதைச் சராசரி மனிதன் கருத்திற்கொண்டாலும், நாகரீகம் என்பது மனிதகுலத்தின் நல்லொழுக்கப் பண்புகளையே முதன்மைப்படுத்தி நிற்கின்றது. அன்பு, கருணை, காதல் பொறுமை, இரக்கம், சத்தியம், நேர்மை, உழைப்பு, பகிர்வு, சேவை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று பலவாறாக இவை விரிவடையும். மென்மையான உணர்வுகள் மட்டுமல்ல. கோபம், வீரம், பலம், சாதுரியம், உபாயம்(கபடத்தனமான தந்திரமல்ல) என்று இன்னும் பல உணர்வுகளும் இவற்றுள் அடங்கும். எழுத்தாளர்களும் விமர்சகர்களும் 'தர்மாவேசம்'என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்துவார்கள். அக்கிரமத்தைக்கண்டு கொதித்தெழும் போக்கே இத் தர்மாவேசம் என்பது எழுத்தாளர்களுக்கு நெருக்கமான சொற்பிரயோகம்.

மேலே குறிப்பிடப்பட்ட நல்லொழுக்கப் பண்புகளை உள்ளடக்கிய நாகரீகம் வளர வளர அவற்றுக்கு நேரெதிரான தீய பண்புகளும் வளர்ந்தே வந்துள்ளன.வருகின்றன என்பதை நாம் மறுக்கமுடியாது. அவற்றை இங்கு வரிசைப்படுத்த வேண்டியதில்லை. எழுத்தாளன் அவற்றுக்கெதிராகவே தன் பேனா முனையில் தர்மாவேசம் கொள்கிறான் என்பது நமக்கெல்லாம் பெருமை தரும் விடயம்.

மொழி தோன்றாக் காலத்தில் சைகைமூலமாகவும், குரல் ஒலி மூலமாகவும் வெளிப்பட்ட மனித உணர்வுகள், மொழிதோன்றிய பின்னர் பாட்டாக கூத்தாக வெளிப்பட்டு காலப்போக்கில் அவை கலைமெருகேறி சங்கீதம் நடனம்என பரிமளித்தன. மிக நீண்ட காலவோட்டத்தில் மொழிக்கு உருவ அமைப்பு ஏற்பட்ட பின்னர்தான் மனிதன் தன் எண்ணங்களை எழுத்தில் வெளிப்படுத்தினான். அதனுடைய பரிணாம வளர்ச்சியே இலக்கியங்களாகும்.

புராணங்கள், இதிகாசங்கள், காவியங்கள் யாவும் நமது முன்னோர் நமக்களித்த இலக்கியச் செல்வங்களாகும். மனித வரலாற்றைக் கூறும் சரித்திரங்களும் இவற்றுள் அடங்கும். காலப்போக்கில் வைத்திய அறிவு, தொழில்நுட்ப அறிவு, ஆட்சித்தத்துவம், வாழ்க்கைத்திறன், விஞ்ஞான அறிவு என்றெல்லாம் பல்வேறுபட்ட நுண்மங்கள் பல்கிப்பெருகி வளர்ச்சியுற்றிருப்பதற்கு மொழியே ஆதாரமானது. மொழிதான் அன்றைய புராண, இதிகாச இலக்கியங்களிலிருந்து இன்றைய நவீன இலக்கியம் வரை பிரவகித்து நிற்பதற்கு ஆதார சுருதியாய் நிற்கின்றது.



மனிதர் யாவரும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவர்கள் அல்லர். உருவ அமைப்பில் மட்டுமல்ல உணர்வுபூர்வமாகவும் அனைவரும் ஒரே மாதிரியானவர்கள் அல்லர். பொதுக் கருத்துக்களால் அவர்கள் ஒன்று சேர்வதுண்டு. ஆனால் மனவுணர்வுகள் வேறுபட்டே உள்ளன. இலக்கியப் படைப்பாளிகள், கலைப்படைப்பாளிகளிடையிலும் இத்தகைய போக்குகள் தொடர்ச்சியாகவே இருந்துவருவது கண்கூடு.வியாச முனிவராயிருந்தா லென்ன. வால்மீகி, கம்பனாயிருந்தாலென்ன, இளங்கோவடிகளாயிருந் தாலென்ன — அவர்களுக்குப் பிந்திய புலவர்களாயிருந்தாலென்ன, இன்றைய நவீன எழுத்தாளர்களாயிருந்தாலென்ன அனைவருமே தாங்கள் சொல்ல வந்த செய்திகளை முன்வைக்கும் கருத்துக்களை, மற்றவர்களுக்கு கவர்ச்சியையும் ரசனையையும் ஊட்டும்வகையில், தத்தமக்கு கைவரப்பெற்ற கலை நயத்துடனேயே சொல்லியிருக்கின்றார்கள். சொல்லிவருகின்றார்கள். கருத்துக்கள் மக்கள்மத்தியில் சென்றடைவதற்குக் கலைநயம் மிக முக்கியமானது. புராண — இதிகாச இலக்கியங்களைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால், அனேகமான இலக்கியங்கள் அவை தெய்வ பாத்திரங்களாயிருந்தாலென்ன, மானுடப்பாத்திரங்களாயிருந்தாலென்ன அந்த இலக்கியங்களிலெல்லாம் தர்மத்திற்கும், அதர்மத்திற்கும் இடையிலான போராட்டங்களே மூலக்கருவாய் அமைந்திருப்பதை நாம் காண்கிறோம். தர்மமே வென்றதாய் அவை சித்தரிக்கப்பட்டுள்ளமையையும் காண்கிறோம். வெறுமனே சித்தரிப்பல்ல. அத் தர்மநெறிக்கருத்துக்கள் அழுத்தமாக வலியுறுத்தப்படுவதையும் உணர்கிறோம். இவற்றை ஒரு நவீன எழுத்தாளர் —

'வேதங்கள் குருவைப்போல் உபதேசக்கின்றன
சாத்திரங்கள் மன்னனைப்போல் ஆணையிடுகின்றன
காவியங்களோ, பிரேமையுள்ள மனைவியைப்போல் இணங்கச் செய்கின்றன'
என்று அழகாக வர்ணித்துள்ளார்.

கருத்துக்களை அழுத்திச் சொல்லும் இத்தகைய கோட்பாடுகளிலிருந்து இன்றைய எழுத்தாளர்களை விலக்கிவைக்கமுடியாது. அவர்களில் பெரும்பான்மையோர் சமூகமாற்றத்திற்கும் மக்களுடைய மேம்பாட்டுக்கு மாகவே தங்களுடைய எழுத்துக்களை முன்வைக்கிறார்கள் என்று பெருமைகொள்ளும் வேளை அத்தகைய குறிக்கோள் எதுவுமின்றி பேனா ஓட்டுபவர்களும் இருக்கிறார்கள் என்பதை நாம் மறுக்கமுடியாது.

எமது தமிழ் இலக்கியமல்ல, சர்வதேச நாடுகளிலுள்ள பல மொழி இலக்கியங்களும் அவற்றின் உள்ளடக்கத்தில் பெரும் மாற்றத்தைக்கொண்டு சிலிர்த்துவளரத் தொடங்கிய காலகட்டம் ஒன்று ஏற்பட்டது.அதுவே ரஷ்யப் புரட்சியாகும். நிலப்பிரபுத்துவ — முதலாளித்துவ அதிகாரவர்க்கங்களுக் கெதிராக நடைபெற்று வெற்றியீட்டிய தொழிலாளி வர்க்கத்தின் சோஷலிசப் புரட்சியே இதற்குக் காரணமாகும்.

மார்க்ஸ் — ஏங்கல்ஸ் ஆகிய சோஷலிச சிந்தனாவாதிகளின் கருத்துக்களை நடைமுறைப்படுத்தி லெனின் என்ற மாமேதை இந்த

வெற்றியை முன்னெடுத்துச்சென்றார். அதுகாலவரை அடக்கி ஒடுக்கப்பட்டு அவல வாழ்வு வாழ்ந்துவந்த சாதாரண மக்களும் தொழிலாளி வர்க்கமும் புதுவாழ்வு பெற்றனர். மார்க்ஸிம் கோர்க்கி என்ற மாபெரும் இலக்கிய விற்பன்னர், இலக்கியத்தில் ஒரு புதியபாதையை வகுத்தார்.காலவோட்டத்தில் இந்தப் புதியபாதை சர்வதேச நாடுகளிலும் சர்வதேச மொழிகளிலும் முன் செல்லத் தொடங்கியது. ரஷ்ய இலக்கியங்கள் நமது மொழிபேசும் அண்டைநாடான தமிழகத்தில் விரிவெடுத்து நமது நாட்டிலும் பரவத் தொடங்கியது. இலக்கியத்துக்கு ஒரு குறிக்கோள் ஒரு சமுதாய நோக்கு இருக்கவேண்டும் என்ற கொள்கை இக் காலகட்டத்தின் பின்னரே வலிமையோடு நிலைகொள்ளத் தொடங்கியது.

புராண இதிகாச இலக்கியங்கள், தர்மத்திற்கும் அதர்மத்திற்குப் இடையேயான போராட்டங்களாக உருப்பெற்றன என்று முன்னர் பார்த்தோம். அந்தத் தர்ம — அதர்மப் போராட்டம் காலம் முழுதும் தொடர்ந்து கொண்டிருந்தாலும், அதன் அடிநிலையான நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ அடக்குமுறைகளாலும்,சமூக ஏற்றத்தாழ்வுகளாலும் நசுங்குண்ட மக்களுக்கு விடுதலையை — விமோசனத்தைக் காட்டும் இலக்கியங்களாக நமது படைப்புக்கள் துளிர்த்தமைக்கு ரஷ்ய இலக்கியங்களே விடிவெள்ளியாகத் தோன்றின.

அதேவேளை, இத்தகைய மக்கள் இலக்கியங்கள் தோன்றுவதற்குக் காலாயிருந்த ரஷ்ய நாட்டிலும் சரி, அதைத்தொடர்ந்த மற்றைய நாடுகளிலும் சரி, இலக்கியக்கோட்பாடுகள் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் இருந்தன என்பதை நாம் அறிய முடிகின்றது. உருவம் உள்ளடக்கம் தொடர்பான இத்தகைய பிரச்சினைகள் கருத்து நிலைப்பாட்டுக்கும், அழகியல் நிலைப்பாட்டுக்குமிடையில் நிலவின. சமுதாய மாற்றத்திற்கான கருத்துக்கள் மக்களைச் சென்றடைய கலைநய உணர்வுகள் அவசியம். இந்த நிலைப்பாட்டை, கோர்க்கி தீவிரமாகக் கடைப்பிடித்தார். அழகியலைமட்டுமே இலக்கியமாகக்கொள்பவர்களும் இருந்துள்ளார்கள்.இவர்களை வென்றெடுக்க கோர்க்கி முன்வைத்த கருத்துக்கள் மிகச் சிறந்தவையாயும், பலனுள்ளவையாயும் அமைந்தன.

☐ மனிதனுக்கு அப்பால் எந்தக் கருத்துக்களும் இல்லை. மனிதன்தான் — மனிதன்ஒருவன்தான் எல்லாப் பொருட்களையும் எல்லாக் கருத்துக்களையும் படைப்பவன்! அற்புதங்களைச் செய்பவன் மனிதன் ஒருவனே! இயற்கையின் சக்திகளை ஆட்சிகொள்கிற எதிர்கால எஜமானன் மனிதனே!

☐ கவிஞர்கள் பட்டைதீட்டித் தருகிறார்கள். பட்டை தீட்டாத வகையிலே அவற்றை மூலத்தில் அளிப்பவர்கள் மக்களே!

மனிதனுடைய அதியுன்னத சிறப்பை இவ்வாறு முன்வைத்த கோர்க்கி, அவனை ஒன்றுதிரட்டி அரவணைத்து அவனுடைய உயர்வுக்காகவே நாம் பாடுபடவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றார்.

(தொடர்ச்சி 61ம் பக்கம்)



## பிராங்போர்ட்டில் —
## இலக்கிய ஆர்வலர் ஒன்றுகூடல்.

18.04.1998 அன்று Gross-Gerau இல் திரு.சி.சிவகுமார் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இலக்கிய ஆர்வலர் ஒன்று கூடலில் இலக்கிய ஆர்வலர் பலர் பங்குகொண்டனர். இலக்கியத்திற்கு மேலும் மெருகூட்டவல்ல நல்ல பல கருத்துக்கள் இவ்வொன்றுகூடலில் தெரிவிக்கப்பட்டன.

கலை, இலக்கிய ரசனையை மேம்படுத்துவதற்கான கலை, இலக்கியப் பட்டறைகள் அமைத்தல்.
தமிழ்ச் சிறார்களுக்கான மொழிவளர்ச்சித் திட்டமும், செயற்படுத்தலும்,
இலக்கிய ஆய்வாளர்களை உருவாக்குதல்,
மேற்படிப்புக்கான ஒழுங்கு,
பலதரப்பட்ட துறையாளர்களையும் இணைத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பயன்படுத்தல்,
கருத்தாழம் மிக்க பிறமொழியிலக்கியங்களின் தெரிவும் அவற்றின் மொழிபெயர்ப்பும்,
அனைத்துலக பல்கலைக்கழக கலைப் பீடங்களுடனான(தமிழ்ப்பிரிவு) தொடர்பினை ஏற்படுத்தல்

என்பன இதன் ஆரம்ப செயற்திட்டங்களாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன் இரண்டாவது ஒன்றுகூடல் 20.06.98 சனிக்கிழமை அன்றும் 3வது ஒன்றுகூடல் 12.09.98 சனிக்கிழமை அன்றும் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
மேலதிக விபரங்களுக்கு —
**G.S.Sivakumar,Walburga str.5, 64521 Gross-Gerau** என்னும் முகவரிக்கு தொடர்புகொள்ளலாம்.

# அழைப்பு.

வளவை வளவன்.

வசந்தகாலத்தை அர்த்தப்படுத்துவதாக அந்தச் சோலை திகழ்ந்தது.
கனிந்துசொரியும் கனிதரு விருட்சங்களில் பறவைகளெல்லாம் கூடிப் பசியாறின. உண்டு களை தீர்ந்த மகிழ்வில் சுவையாடி மகிழ்ந்தன.
ஒரே ஆரவாரந்தான் போங்கள்.
அணில் ஒன்று வாலைஆட்டி ஆட்டி "உச்... உச்...ச்... ச்...." என்று தன் வெண்கலக் குரலால் பாடிக் கொம்பரில் ஓடி விளையாடியது.
எங்கோ அண்டங்காகமொன்று தன் தொளதொளத்த குரலால் "கா... கா.... க்கா..." என்று கதறிக் கரைந்துகொண்டது.

"வயிறு நிறைந்துவிட்டால் போதும் கழுதைகள்கூடக் கானம் பாடத் தொடங்கிவிடுகின்றன" என்று அமைதியாகச் சொன்னது குயில்.
குயிலின் பேச்சில் நிறைந்திருந்த அகம்பாவத்தைப் புரிந்துகொண்ட கொட்டுப் புறாவொன்றும ""வீணான வம்பில் மாட்டாமல் போ!" என்று எச்சரித்தது.
"பாடத்தெரியாத புலவர்களெல்லாம் இப்போது பாடலுக்கு இசையமைக்கப் பார்க்கிறார்கள்!" என்று கொட்டுப்புறாவைக் கேலிசெய்தது குயில்.
கொட்டுப் புறாவுக்குக் கோபம் பொங்கி எழுந்தது.
"பாடுவதில் நீ மகா மேதைதான். உலகப் புகழ் பெற்றவர்தான். ஆனால் உன் பாட்டை நீ எங்கிருந்து பாடுகிறாய் என்பதாவது உனக்குப் புரிகிறதா? உனக்கென்று ஒரு சொந்த வீடற்று இருக்கும் உனக்குப் பாடல் ஒரு கேடா?" என்று கேட்டது கொட்டுப் புறா.
அணில் கொட்டுப்புறாவின் நியாயமான கேள்வியை ஆதரிப்பதுபோல வாலை உயர்த்தி உயர்த்தி "உச்உச்...ச்ச்..." என்று பாடியது.
கரிக்குருவிகளும் எருத்துவாற்குருவிகளும் கூடி "கீச்சோ... கீச்சோ" என்று பாடத்தொடங்கின..
"பார்த்தாயா? உன்னைவிடச் சிறியபறவைகளெல்லாம் தமக்குத் தாமே தனிக்கூடு கட்டிக்கொண்டு பாடுகின்றன. ஆனால் நீ...இரவல் வீட்டிலிருந்து இதமான பாட்டுப்பாடி ஏதேதோ புசத்தவும் செய்கிறாய்... உனது பாடலும் நீயும்... யாருன்னை மதிக்கிறார்கள்.. போ.. போ...!" என்று கொட்டுப்புறா மீண்டும் கூறியது.
குயிலின் சிந்தனையில் பலமான அடியொன்று வீழ்ந்தது.
ஆம்...சின்னஞ்சிறிய பறவைகளெல்லாம் தனக்கென்று வீடுகட்டிக் கொண்டிருக்கும்போது எனக்கென்று ஒரு வீடு...என் இனத்திற்கென்று..?.
சிந்தனை உணர்வானபோது....
"கூக்... கு...குக்கூ ...கூடுகட்டுவோம்...கூகூ... கூடுகட்டிக் கூடுங்கள் குக்கூ குக்கூ..." என்று தன் இன்னை விழித்துக் கூவி அழைத்தது குயில்.
சோலை முழுவதும் குயிலின் அழைப்பு எதிரொலித்துக் கொண்டிருந்தது.
சோலையை நாடிப் படையணிபோல் பல குயில்கள் எல்லாத் திசைகளிலிருந்தும் பறந்துகொண்டிருந்தன.
□□□

(நன்றி — சிரித்திரன் 1991)



அடுத்த இதழில்
ஆரம்பம்!
இணுவையூர்
கு.விக்கினேஸ்வரன்
எழுதும்
'தியாகத்தின் பாதையில்'
(தொடர்கதை)

பூவரசு 51வது இதழிலிருந்து
ஒவ்வொரு இதழும்
பிறநாட்டுச் சிறப்பிதழ்களாக வரும்
என்று ஒரு அறிவிப்பு
பூவரசு கார்த்திகை மார்கழி 97
இதழில் வெளியாகியிருந்தது.
முதல் இதழ்
மலேசியச் சிறப்பிதழாக வரும்
என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.
படைப்பாளர்களிடமிருந்து
ஆக்கங்களைப்பெறுவதற்கு
கால அவகாசம் தேவைப்படுவதாக
மலேசியச் சிறப்பிதழின்
தொகுப்பாளர்
கவிஞர் திரு.அருணாசலம்
அவர்கள் கேட்டுள்ளார்.
எனவே —
மறு அறிவித்தல் வரை
வாசகர்கள்
மன்னிக்க வேண்டுகிறேன்!

அன்புடன்
இந்துமகேஷ்.



# மாற்றங்கள்.

— ஞானக்குமாரன்.

"தம்பி ரவி! கெதியா எழும்பு. விடிஞ்சிட்டுது. பள்ளிக்கூடத்துக்குட் போறவழியிலை இந்தப் பாலை சிவலிங்கம் மாஸ்ரரிட்டைக் குடுத்திட்டுட் போப்பு.!" என்று ஆறுவயதான தனது செல்லமகனை வருடினாள் தாய் பார்வதி.

அவர்களது குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கித் தவித்தாலும் ஒரே மகனான ரவிக்கு எந்தக் குறையையும் அவர்கள் வைக்கவில்லை.

"அம்மா! நான் இண்டைக்குப் பள்ளிக்கூடம்போகேல்லை." என்றான் ரவி.

"என்ன புதினம் இது? ஒருநாளும் இல்லாத கதையொண்டு இண்டைக்கு வருது."



எஸ்.கந்தசாமி
எழுதும்-
**20ம் நூற்றாண்டின் முக்கிய நிகழ்வுகள்!**
(கட்டுரைத் தொடர்)
அடுத்த இதழில் ஆரம்பம்.

இன்னும் சில மாதங்கள்தான்!
அடுத்த நூற்றாண்டின் ஆரம்பம்
இதோ மிக அருகில் தெரிகிறது.
கடந்துபோன நூற்றாண்டைச்
சற்றுத் திரும்பிப்பார்த்தால்....?
எத்தனை வியத்தகு நிகழ்வுகள்!

"இல்லை அம்மா. என்ரை வகுப்பிலை எல்லாரும் சப்பாத்துப் போட்டுக் கொண்டு வருகிறார்கள். எனக்கும் ஒரு சப்பாத்து வேண்டித் தரச்சொல்லி எத்தினைநாள் கேட்டிட்டன். நெடுகிலும் ஏமாத்திட்டியள். சப்பாத்து வேண்டினாத்தான் பள்ளிக்கூடம்போவன்!" என்று அடம்பிடித்து சிணுங்கினான் ரவி.

"என்ரை செல்லமெல்லே. இண்டைக்கு எப்பிடியும் நீ பள்ளியாலை வந்த உடனை ரெண்டுபேரும்போய் சப்பாத்து வாங்குவம். இப்ப பள்ளிக்குப் போ!" என்று தாய் அவனை வெளிக்கிடுத்தினாள்.

"சரி. இண்டைக்கு ஏமாத்தக்கூடாது என்னம்மா" என்றபடி பால்போத்தலுடன் சென்றான் ரவி.

சமையல் முடிந்ததும் கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்துவைத்த உண்டியல் பணத்தை எடுத்து எண்ணத்தொடங்கினாள் பார்வதி.

'பாவம். அந்தப்பிள்ளையை கனநாளாய் ஏமாத்திறன். இண்டைக்கு சப்பாத்து வாங்கிக் குடுப்பம். என்றபடி ரவியின் வரவை எதிர்பார்த்து வாசலைப் பார்த்தபடி காத்திருந்தாள்.

அதோ வந்துவிட்டான்.

"வா தம்பி ரவி. சாப்பிட்டிட்டு ரண்டு பேரும் ரவுனுக்குப் போய் சப்பாத்து வாங்குவம்!"

"அம்மா! எனக்கு சப்பாத்து வேண்டாம் அம்மா! இந்தச் செருப்பே போதும்!" என்றான் ரவி.

"ஏன்...? என்ன நடந்தது? காலேலைதானே சப்பாத்து வேணும் எண்டு ஒற்றைக் காலிலை நிண்ட நீ. இப்ப ஏன் வேண்டாம் எண்டுறாய்?"

"இண்டைக்குப் பள்ளிக்கூடத்திலை இரண்டு காலும் இல்லாதபெடியன் ஒருத்தன் புதுசா சேர்ந்தவன். குண்டுவெடிச்சு அவனுக்கு காலே இல்லாமல் போட்டுது. எனக்கு சப்பாத்து இல்லாட்டி என்னம்மா. கால் இருக்கிறதே. போதும்!" என்றபடி அடுப்படிக்குள் புகுந்தான் ரவி.

திகைத்தபடி நின்றாள் தாய் பார்வதி.

□□□

# படித்ததில் கிடைத்தது.

*'இறைவனை பூஜித்தால் கேட்பது கிடைக்கும். மன நிம்மதி பெறலாம், சந்தோஷமாக வாழலாம்.' என்று பொதுவாக நம்பப்படுகிறது. அதேசமயம், 'தலையெழுத்தை மாற்றவேமுடியாது. விதிப்படிதான் நடக்கும்.' என்றும் கூறப்படுகிறது. ஏன் இந்த முரண்பாடு?*

விதி என்பது நாம் முன்புசெய்த கர்மாவின் பலன்கள். அவற்றை அதிர்ஷ்டம் (பார்க்கமுடியாதவை) என்று கூறுகிறோம். அவை நமக்கு நாள்தோறும் சுகத்தையும் துக்கத்தையும் கொடுக்கக்கூடிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தித் தருகின்றன. இதைத்தான் நாம்பாவ புண்ணியம் என்றும்,வினையென்றும் சொல்கிறோம்.நமக்கு துக்கத்தைக் கொடுக்கக்கூடிய பாவங்களைக் குறைப்பதற்கு நாம் அதேமாதிரி அதிர்ஷ்டமான பலனை ஏற்படுத்தவேண்டும். அது எதிர்ப்பு சக்தியாக (Antibody) வேலைசெய்கிறது. பிரார்த்தனை என்பது ஒரு கர்மா, செயல். அந்த கர்மாவின் பலன் அதிர்ஷ்டமாக இருக்கிறது.எவ்வளவு உறுதியாகப் பிரார்த்தனை செய்கிறோமோ,அதற்கு ஏற்றமாதிரி பாவத்தைக் குறைப்பதோ அல்லது முழுமையாக நிவிர்த்திசெய்வதோ இயலும். இதேபோல், பிரார்த்தனையின் மூலம் நமக்கு நல்லது செய்யும் புண்ணியத்தையும் அதிகப்படுத்திக்கொள்ளலாம்.


— சுவாமி தயானந்த சரஸ்வதி.



எங்கள்

# இளந்தளிர்கள்

வைகாசி-ஆனி 1998



நாம் வாழத் தமிழ் வாழும். தமிழ் வாழ நாம் வாழ்வோம்.

இளையோர்க்கான
பிரத்தியேக இணைப்பு
பூவரசு

தை மாசி 1998 எங்கள் இளந்தளிர்களில் வெளியான போட்டிகளுக்கான விடைகள்.

**போட்டி எண்: 1**
**மனிதரின் வயது- 47.**

**போட்டி எண்: 2**
**வித்தியாசமான வண்ணத்துப் பூச்சியின் இலக்கம் 11.**

**போட்டி எண்: 3.**
நாடுகள்:-
1. எகிப்து
2. இத்தாலி
3. அமெரிக்கா
4. யப்பான்.

**போட்டி எண்: 4**
மறைந்திருப்பது
-கங்காரு.

**அதிகளவு சரியானவிடைகளை எழுதியவர்கள்:**
1. செல்வி தயாளினி நடராஜா
2. செல்வி கஜினி தேவராஜா
3. செல்வன் கஜிநாத் தவம்
4. செல்வன் ந.திருகஜமுகன்.
5. செல்வன் ஆனந்த் குலதாசன்.
6. செல்வன் அசோக் குலதாசன்.
7. செல்வன் சிவஞ்ஜீவ் சிவராம்.

பரிசுபெறுபவர்:
**செல்வி கஜினி தேவராஜா**

அன்பான தம்பி தங்கைகளே!
எமது பூவரசு ஆண்டுநிறைவுப் போட்டிகளில் இடம்பெற்ற குறுக்கெழுத்துப் போட்டியில் பரிசுபெறுபவரை நூலகக் கண்காட்சியின்போது தெரிவுசெய்வதாகக் கூறியிருந்தோம் அல்லவா?
அவ்வாறே தெரிவு செய்தோம்.
**குறுக்கெழுத்துப் போட்டியில் 28 பேர் சரியான விடைகளை எழுதி அனுப்பியிருந்தீர்கள்.**
**உங்களில் பரிசு பெறுபவர்:**
**செல்வி ரோகிணி சிவராஜா.**


பங்குனி சித்திரை 1998 எங்கள் இளந்தளிர்களில் வெளியான போட்டிகளுக்கான விடைகள்:

போட்டி எண்: 1
மறைந்திருக்கும்பொருள்கள்.
சப்பாத்து, கேத்தில், பேனா, கத்தி
பலூன், கொடி

போட்டி எண்: 2
ஒரேமாதிரியுள்ள இரண்டு கங்காருகள்
இல.1ம் இல.6ம்

போட்டி எண்: 3
நிழல்கள்:
அ-2. ஆ-4. இ-3. ஈ-1


போட்டி எண்: 4.




**போட்டி எண்: 5**
**சிங்கத்தின் வயது 87 மாதங்கள்.**
**(7வருடம் 3மாதம்)**

**அதிகளவு சரியான விடைகளை எழுதியவர்கள்:**
1. செல்வன் சிவஞ்ஜீவ் சிவராம்.
2. செல்வன் ஆனந்த் குலதாசன்
3. செல்வி ஜெயகௌரி செந்தில்வாசன்.
4. செல்வி ஆன் வினோலினி நடேசன்.
5. செல்வன் அசோக் குலதாசன்.

பரிசு பெறுபவர்:
**செல்வன் ஆனந்த் குலதாசன்.**



பரிசுபெறும் ஒவ்வொருவருக்கும் 10.-DM வீதம் பரிசுகள் அனுப்பி வைக்கப்படும்.

பரிசுகள் கிடைத்ததும் தவறாது எமக்கு அறியத்தருமபடி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்புடன்
ஆசிரியர்.

# அறம் செய்ய விரும்பு.

உலகில் வாழும் ஒவ்வொரு உயிரும் இன்னோர் உயிரிடத்தில் தங்கிவாழ்கின்ற தன்மை காணப்படுகின்றது. ஒருவன் தன்னிடம் அதிகமாக உள்ளவற்றினையோ அல்லது தன்னிடம் உள்ளதில் ஒரு பகுதியையோ மற்றவருக்கு வழங்குவதைத்தான் அறம் என்று கூறுகின்றோம்.

ஆனால் திருக்குறளிலே அறம் என்ற சொல்லுக்குட் பல்வேறு அர்த்தங்கள் உண்டு.

'அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க' மற்றது பொன்றுங்கால் பொன்றாத்துணை.' என்று ஒரு குறள் உண்டு.

ஒருவன் இறக்கும்போது செய்கின்ற தருமம்தான் அவனை இறக்கும்போது காக்குமாம். அறத்துக்கு நிகர் இவ்வுலகில் வேறில்லை. அறவழிநின்று அறம்செய்வதில் தமிழருக்கு நிகர் வேறுயாருமில்லை. என்பதை நாம் வரலாற்றிலும்சரி, நிகழ்காலத்திலும்சரி பல சம்பவங்கள் மூலமாக அறியமுடிகின்றது. அன்று நாம் வரலாற்று இலக்கியத்தில் கர்ணனைப் பார்த்தோம். இல்லை என்று சொல்லாமல் கேட்டவர்க்கு எல்லாம் வாரிவாரிக் கொடுத்தான். இறக்கும்போதுகூட அறம் செய்துதான் இறந்தான். பாரிவள்ளலும் தன்னிடம் இருந்த செல்வத்தைத்தான் அறமாகக் கொடுத்தான்.

சிவி என்ற அரசன் ஒரு புறாவைக் கழுகிடமிருந்து காத்தான். இவற்றைக்கண்டு அன்றைய உலகம் வியந்தது.

ஆனால் இன்று நம் ஈழத்தில் பண்டைய வரலாற்றையும் மிஞ்சக்கூடிய வகையில் தனது நாட்டுக்காக எதை ஒரு மனிதன் இறுதிவரைக்கும் காக்க நினைப்பானோ அந்த உயிரையே தற்கொடையாக ஈகை செய்கின்ற இந்தவீர மறவர்களைக்கண்டு இன்று முழு உலகமுமே தலைசாய்த்து வணங்குகின்றது.

உரிமைகளை வென்றெடுக்கவும் நீதியைத் தலைநிமிர வைக்கவும் அறவழியில் உண்ணா நோன்பிருந்து தங்கள் இன்னுயிரை ஈகை செய்தவர்களின் அறத்துக்கும், இளவயதில் எதிரியை அழித்து மக்களைக் காப்பதற்காக தங்களின் மடியிலே மரணத்தை அழைத்துச்செல்கின்ற இளம் புலிவீரர்களின் அறத்திற்கும் ஈடு இணை ஏது?


அறம்என்ற சொல் இன்றுவரை இருப்பதற்கும் அறம் என்ற சொல் பெருமை அடைவதற்கும் முக்கியமாக இவர்களே காரணகர்த்தாக்கள். ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் காலத்தில் மற்றவருக்கு இயன்றளவு அறம் செய்வதன்மூலம் அவர் தம் மனிதப் பிறவியில் முழுமையும் பெருமையும் அடைகின்றார்.

வாழைமரத்தைப் பாருங்கள்.

அந்தமரம் உயிருடன் இருக்கும்போதும் சரி, இறந்தபின்னும்சரி மற்றவர்க்குப் பயன்படுகின்றது. ஒவ்வொரு மனிதனும் வாழைமரத்தைப்போல் வாழவேண்டும். அறம்செய்வதன் மூலம் நாங்கள் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கவேண்டும். மற்றவர்களுக்கு உதவாது பொன்,பொருள், செல்வங்களைப பதுக்கி வைத்திருப்போர், காட்டிலே எறிக்கும் நிலவைப்போலவோ அல்லது கடலிலே பெய்த மழையைப்போலவோ யாருக்கும் பலனின்றி இருக்கும். அப்படி இல்லாமல் துரும்பாக இருப்பினும் மற்றவரை ஏற்றும் ஏணியாக இருப்பதுதான் உண்மையான அறமாகும். அதுதான் வாழ்வில் வெற்றி பெறும். எனவே மாணவர்களாகிய நாமும் இளம்வயதியே அறம்செய்யும் நல்ல பழக்கத்தைக் ஏற்படுத்திக் கொள்வோமாக.

ஆனந்த் குலதாசன்.

('அ ' விரும்பு'கட்டுரைப்போட்டியில் இரண்டாவது பரிசுபெற்றது)




## கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை.




பசியால் அலைந்த ஓநாய் ஒன்று புதருக்குள் கிடந்த ஆமை ஒன்றைக்கண்டது.
'ஆகா இப்போதாவது எனக்கு ஒரு உணவு கிடைத்ததே!' என்று சந்தோஷப்பட்டு ஆமையைச் கௌவிக்கொண்டது. விரைவில் சாப்பிட்டுவிட எண்ணி புரட்டி புரட்டிக் கடிக்க ஆரம்பித்தது. இதனால்
பயந்த ஆமை தன் அவயவங்களை ஓட்டுக்கு உள்ளே இழுத்துக் கொண்டு செய்வதறியாது திணறியது. 'ஐயோ கடவுளே! நான் எப்படி இந்த ஓநாயிடம் இருந்து தப்புவேன்?' என்று பலவாறு யோசித்தது.
ஓநாய் தன் வலிமையைக் கூட்டிக் கடித்துப் முடியாமல் களைப்பினால் ஓய்ந்துபோனது.
இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஓநாயிடம் ஆமை பேச்சுக் கொடுத்தது.
"அண்ணா!நீங்கள் பசியினால் களைப்படைந்துவிட்டீர்கள். என்னை நீங்கள் சாப்பிடுவதானால் அருகில் உள்ள குளத்தினில் என்னை நனைய வையுங்கள். நனைந்த பின்பு இலகுவாக சாப்பிடலாம்!" என்றது.
பசியின் மிகுதியால் களைத்திருந்த ஓநாய்க்கு ஆமையின் தந்திரம் புரியவில்லை. உடனே ஆமையைக் குளத்து நீருக்குள் வைத்து தனது





முன்னங்கால்களால் மிதித்துக்கொண்டது. சிறிது நேரம் போனதும் ஓநாய் "ஆமையாரே!ஆமையாரே! எனக்குப் பசியினால் உயிர் போய்விடுப் போலிருக்கிறது. நனைந்துவிட்டீரா?" என்று வினவியது.
அதற்கு ஆமை "எனது உடல் முற்றாக நனைந்து இளகிவிட்டது. ஆனால் நீங்கள் கால்வைத்திருக்குப் இடம்மாத்திரம் நனையவில்லை. நீங்கள் முதுகில் மிதித்திருக்கும் கால்களை எடுத்துக்கொண்டால் முற்றாக நனைந்துவிடுவேன்!" என்று கூறியது.
அவசரத்தில் ஓநாய் தன் கால்களை தூக்கிக்கொண்டது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தப்பினேன் பிழைத்தேன் என்று ஆமை நீருக்குள் ஓடி மறைந்தது.
கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையே என்று வேதனையோடும் ஏமாற்றத்துடனும் ஓநாய் திரும்பிச்சென்றது.

கஜிநாத் தவம்.
(என்னப்பெற்றால்)





# ஔவையார்

குமரியில் தாடக மலையின் அடிவாரத்தில்
தோவாளை ஆற்றங்கரையில்
வயல்கள், வாழை, தென்னை, பாக்குமரங்கள் சூழ்ந்த இடத்தில் ஒரு
பெரிய நாவல் மரத்தின் மேல் ஓர் இடைச் சிறுவன் உட்கார்ந்து நாவற் பழங்களைத் தின்று கொண்டிருந்தான்.
கீழே அவன் மேய்த்த எருமைமாடு
படுத்துக்கொண்டிருந்தது.
களைத்து வந்த ஔவையார் அந்த மர நிழலில் நின்றார்.
"சிறுவனே எனக்கும் கொஞ்சம் நாவல் பழங்கள் பறித்துப் போடு!" என்றார்.
"கிழவி உனக்குச் சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?"
"நாவல் பழத்தில் இப்படி இரண்டு வகைகள் இருக்கின்றனவா? எனக்குச் சுடாத பழமே போடு!"
"நான் மரத்தைக் குலுக்குகிறேன். நீ சுடாத பழங்களை எடுத்துக் கொள்!"
மரக்கிளைகளைக் கையில் பிடித்துக் குலுக்கிவிட்டான். அதிலிருந்து கனிந்த பழங்களும் கனியாத பழங்களும் கீழே உதிர்ந்தன. ஔவையார் கனிந்த பழங்களில் சிலவற்றைப் பொறுக்கிப்பார்த்துத் தரையில் இருந்த மணல் ஒட்டிக்கொண்டிருந்ததால் வாயில் அவைகளை வைத்து ஊதினார்.
"என்ன கிழவி! சுடாத பழம் கேட்ட நீ இப்பொழுது சுடுகிற பழத்தைத் தின்கிறாய். வாய் வெந்துவிடப்போகிறது. நன்றாக ஊதி ஆறியபிறகு சாப்பிடு!"
'அப்படியென்றால் சுடாத பழம் என்பது காய்.எல்லாம் தெரிந்தவள் என்று சொல்லப்படும் எனக்கு இது தெரியாமல் போய்விட்டதே! கருங்காலி மரத்தை





ஓரேயடியாய் வெட்டும் கோடாலி மழுங்கிவிட்டால் வாழைத் தண்டைக்கூட வெட்டாது. அதுபோன்று காட்டில் இந்தக் கரிய எருமையை மேய்க்கும் சிறுவனுக்கு நான் தோற்றுவிட்டேனே. இனிமேல் எந்த இரவும் நான் உறங்கமாட்டேன்!'
"இனிமேல் நீ எங்கே உறங்கப் போகிறாய் கிழவி.
தப்பு தப்பு தமிழ் மூதாட்டியாரே! என் நான்கு ஐயங்களுக்கு விடை சொல்லுங்கள். நான் உங்களை என்னிடமே அழைத்துக் கொள்கின்றேன். கொடியது எது? அரியது எது? பெரியது எது? இனியது எது?"
"கொடிது கொடிது வறுமை கொடிது. இனிது இனிது ஏகாந்தம் இனிது. பெரிது பெரிது தொண்டர்தம் பெருமை. அரிது அரிது மானிடர் ஆதல்!"
"அற்புதம்!ஔவையே! அற்புதம்!"
"உன்னைப் பார்த்தால் மாட்டுக்காரச் சிறுவனாய் எனக்குத் தோன்றவில்லை. மாமயில் ஏறும் அந்த முருகனாகத் தோன்றுகிறது. முருகா! அன்று தந்தைக்கு உபதேசம் செய்ததைப்போல் இன்று தாய்க்கு உபதேசம் செய்ய வந்தாயா முருகா!முருகா!முருகா!"
ஔவையாரின் விருப்பப்படி அந்த ஊர் 'முப்பந்தல்'என்று அழைக்கப்பட்டு வருகிறது.
நாவல் மரம் சூழ்ந்த இடத்தில் அவருக்கு ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் கருவறையில் கையில் பிரம்புடன் சிலை வடிவில் காட்சி தருகிறார் ஔவையார். அவரின் வலதுபுறம் முருகன் குழந்தைவடிவில் காட்சிஅளிக்கிறார். இந்த ஊரிற்கு ஔவையாரம்மன் கோயில் என்றும் மறுபெயர் உண்டு.

சிவஞ்ஜீவ் சிவராம்.


உங்கள் விடைகள்
வந்து சேரவேண்டிய
இறுதித் திகதி:
25.06.1998



# போட்டிகள்.....

போட்டி எண்: 1


இந்தப்படத்தினுள் சில உயிரினங்கள் மறைந்திருக்கின்றன. அவைகளைச் கண்டுபிடியுங்கள்.





போட்டி எண்: 2


ஒரு கிளையின் பல நிழல்கள் இங்கே தெரிகின்றன.
இவற்றில் ஒன்றுமட்டுமே சரியானது.
அது எது?




1 1 1
3 3 3
7 7 7
9 9 9

போட்டி எண்: 3.

இங்கே 12 எண்கள் உள்ளன.
இவற்றில் 6 எண்களை நீக்கிவிட்டு
மிகுதியை நீங்கள் கூட்டினால்
கூட்டுத்தொகை 1111 (ஆயிரத்துநூற்றுப பதினொன்று)
வரவேண்டும். எப்படி?




போட்டி எண்: 4

இங்குள்ள 6 பூனைகளும் ஒரேமாதிரித் தோன்றுகின்றன அல்லவா? ஆனால் இவற்றில் 2மட்டுமே ஒரேமாதிரியானவை. அவை எவை?

போட்டி எண்: 5.

எண்களை இணைத்து மறைந்திருக்கும் உருவத்தைக் கண்டுபிடியுங்கள்!



# மறுபிறப்பாய் நின்று வென்றாய்!


-விஜயா அமலேந்திரன்.

கடல் நீரே முழுமையாய்க் கண்ணீரானால்
உடல் நீத்தும் உயிர்வாழும் உன்னைச் சொல்லும்
சுடலையில் உன்னுடல் மறைந்த போதும்
கடமையை அதுசுட்டி நிற்குதம்மா!
வீடுதலை வெறும் பேச்சு வார்த்தையல்ல
விளக்காக உயிர்வீசும் வேலையென்று
விளக்கியே வைத்ததால் தெய்வமானாய்!
தமிழீழ வழிகாட்டும் விளக்குமானாய்!

"அருமையாய் வாழ்ந்தஎன் நாடுதன்னை
எருமைகள் அழிக்கவோ இடம்கொடுப்பேன்?
பெருமையாய் என்னவர் வாழ்ந்த நாட்டை
சிறுமையர் கொள்ளவோ இடம்கொடுப்பேன்?
பொறுமையின் எல்லையில் நின்று உன்னை
மறுபிறப் பாய்நின்று வென்றுநிற்பேன்"
என்றநீ மறைந்தாண்டு பத்து அம்மா!
என்றாலும் அதுஎமக்கு நேற்று அம்மா!

சிங்களக் கொடியவர் கொடுமைதன்னை
இந்தியம் சரியென்று ஏற்று நிற்க
"உன்பிழை நீ காண உயிர் கொடுத்தேன்!
என்னாட்டை விட்டுநீ ஓடுவாய்!பார்"
என்றுதான் அன்னை நீ அன்று உன்னை
இன்றைக்கும் மறக்காத வண்ணம் தந்தாய்!
அன்னையெம் பூபதி அன்னையென்றே
அனைவரின் உள்ளமும் நீ நிறைந்தாய்!

வல்ல எம் தலைவனின் வீரம் கண்டு
வாலறுந்து பயந்தோடும் குரங்குகள் போல்
வந்திட்ட சிங்களச் செருக்க ரெல்லாம்
சிந்தியே குருதியில் நடுங்குகின்றார்
முந்தியுன் வீரத்தில் கதைபடித்தார்
இன்றென்ன! என்றுமே மறக்க மாட்டார்!
அன்னையெம் பூபதி என்று பாடும்
அன்னைதமிழ் ஈழத்தை வணங்கி நிற்பார்!



# தேன் மலரும் தேனியும்.

-ப. இராஜகாந்தன்

வழமையாக இனிய ரீங்காரத்துடன் குதூகலமாகப் பறந்து வருகின்ற தேனியார் அன்று பறப்பதற்கும் சக்தியற்றவராய் சிறகொடிந்த பறவைபோல் தத்தித் தத்திப் பறந்து வருவதைப்பார்த்த தேன்மலர் திகைப்புற்றது.

பூவிதழில் மிகவும் சிரமப்பட்டு உட்கார்ந்த தேனியாரின் இறக்கையின் ஒருபக்கம் தீயினால் சுடப்பட்டதுபோல் பொசுங்கி இருப்பதைக் கண்ட மலர், தன் மெல்லிய இதழ்களை படபடவென அடித்து தேனியாருக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியும் ஆவலில் பரபரத்தது.

தேன்மலரின் வேதனையை அவதானித்த தேனியார் மெல்லப் பேசத் தொடங்கினார்.

"அன்பரே! இன்று நான் மிகவும் துன்புற்று வந்திருக்கின்றேன். மானிட வர்க்கம் எம்மினத்தவருக்குப் பெரும் தீங்கு விளைவித்து விட்டது.!" என்று கூறி ஒரு வேதனைப் பெருமூச்சை வெளியேற்றி தொடர்ந்து கூறலானார் —

"நாம் வாழ்ந்த காட்டிற்குத் தீப்பந்தங்களுடன் வந்த சிலர் எம்மில் பெரும்பான்மையோரைத் தீயினால் பொசுக்கிக் கொன்றொழித்த நாம் சிறுகச் சிறுகச் சேர்த்துவைத்த தேன்வங்கியில் இருந்த தேனையும் கொள்ளையடித்துச் சென்றுவிட்டார்கள். எமது கூடு இருந்த இடம் இப்போ கொலைக்களமாக சுடுகாடாகக் காட்சியளிக்கின்றது. நானும் என்னுடன் சிலரும் சிறு காயங்களுடன் தப்பினோம். ஆனால் எம் சகாக்களை எங்கே என்று இன்னும் தெரியவில்லை.!"

தனக்கு நேர்ந்த துன்பத்தை சுருக்கமாகக் கூறிய தேனியார் சற்று ஓய்ந்தார்.



அதிர்ச்சியிலிருந்து விடுபடாது கேட்டுக்கொண்டிருந்த மலரோ சிலைபோல் இருந்தது. பின் ஒருவாறு தன்னைச் சுதாரித்துக்கொண்டு,

"அன்பரே! உமக்கு மட்டுமென்றில்லை. உலகில் வாழும் உயிரினங்கள் எல்லாவற்றிற்குமே வாழ்க்கையில் துன்பமும் போராட்டமும் இயற்கைதான்!" என்று கூறி தேனியாரின் இரு கண்களிலும் வடிந்த கண்ணீரைத் தன் மெல்லிய இதழ்களால் ஒரு தாயின் வாஞ்சையுடன் ஒத்தி எடுத்து ஒரு குழந்தையை அணைப்பதுபோலும் தன் இதழ்களால் தேனியை அணைத்து பசி ஆறும்வரை தேன் ஊட்டியது.

தேனுண்ட தேனியார் சற்றுத் தெம்பாகக் காணப்படவும், "நீர் எப்படித் தப்பித்து வந்தீர்?" என்று அக்கறையுடன் வினவியது மலர்.

அதற்கு 'ம்' என்று ஒருபெருமூச்சை உதிர்த்த தேனியார் தொடர்ந்து நடந்தவற்றைக் கூறலானார்.

"எதிரிகளின் வருகையை சமிக்ஞைமூலம் அறிந்த எமது ராணித்தேனி எங்கள் போர்ப்படையை அழைத்துக்கொண்டு சென்று எதிரியை நேருக்கு நேர் எதிர்கொண்டு போராடினார். ராணியின் உக்கிரமமான தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் சிலர் மயங்கி வீழ்ந்தனர். ஆனால் இன்னும் சிலர் ஈரமான சாக்குப்பையினால் போர்த்திருந்ததினாலும் தீப்பந்தங்களை தாறுமாறாகச் சுழற்றியதாலும் எமக்கு போரிடுவது மிகவும் கஸ்டமாக இருந்தது. தீயினால் கருகி எம்மில் பலர் வீழ்தார்கள். அவ்வேளையில்தான் நானும் தீயினால் சுடப்பட்டேன். இப்படிப் போராட்டம் நடந்துகொண்டு இருக்கையில் எதிரிகளில் சிலர் எமது கூட்டை அணுகி தீயினால் சுட்டும் அடித்தும் துவம்சம் செய்தார்கள். அவ்வேளை ராணித்தேனியார் சமயோசித புத்தியுடன் போரிடுவதை நிறுத்திவிட்டுத் தன்னுடன் வரும்படிகட்டளையிட்டார். நானும் எமது சகாக்கள் சிலருமாக ராணியின் வழிகாட்டலில் போய்க்கொண்டிருந்தபோது காயம்பட்ட என்னால் தொடர்ந்து அவர்கள் வேகத்திற்கு ஈடுகொடுத்துப் பறக்கமுடியவில்லை. தலைசுற்றியது. மேலும் பறக்க முடியாதபோது அரைமயக்கத்தில் ஒரு மரக்கிளையில் அமர்ந்துவிட்டேன். பின் மயக்கம் தெளிந்ததும் இங்கே உம்மிடம் வந்திருக்கின்றேன்" என்று கூறி முடித்தது.

ஆழ்ந்த அனுதாபத்துடனும் வியப்புடனும் இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த தேன்மலர் —

"எதிரிகளின் ஆக்கிரமிப்பு உமக்குமட்டும் என்றில்லை. உதாரணமாக ஈழத்தமிழ் அகதிகளைப் பாரும். அவர்கள் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் படும் துன்பம் சொல்லுந்தரமன்று. அவர்களுக்கும் வழிகாட்ட ஓர் தலைவன் உங்கள் ராணிபோல் உள்ளதால் இன்று தன்மானத்துடன் போராடுகின்றார்கள். இன்னும் சிலர் அகதிகளாக அலைகிறார்கள்!" என்று கூறியது.

அகதிகள் என்ற வார்த்தையைக் கேட்டதும்தான் தேனியாருக்கு தானும் இப்போ ஓர் அகதி என்ற நினைவு ஏற்படவும் அவர் மனம் சுருக்கென்றது. ராணித்தேனி தன்னை வந்து அழைக்கும்வரை மலருடன்தான் தங்கி இருக்கவேண்டும் என்பதையும் உணர்ந்துகொண்டார்.

தேனியாரின் வேதனையை முகக்குறிப்பால் உணர்ந்து கொண்ட தேன்மலர் "உங்கள் ராணியின் வல்லமைக்கு நிகராக யாருமில்லை. ராணியார் உம்மை வந்து அழைக்கும்வரை நீர் எனது விருந்தாளி!" என்று தேனிக்கு ஆறுதல் கூறிற்று.

எப்பொழுதும் சுறுசுறுப்பாக வேலை செய்யும் தேனிக்கோ சும்மா இருப்பது என்பது பெரிய சங்கடமாகத் தோன்றவும் மலருடன் தங்கும் நேரத்தில் அறிவுபூர்வமான விஷயங்களை அறிந்துகொள்வோம். அதற்கு இதுதான் சந்தர்ப்பம் என்று தனக்குள் எண்ணிக் கொண்டார்.
முதலில் மலருக்கு நன்றி கூறும் நோக்கில் "நண்பரே! இறைவன் தன் அழகையெல்லாம் உம்மைப்போன்ற மலர்மூலம் வெளிப்படுத்துகின்றான் போலும். ஆகையால்தான் இவ்வளவு கொடுமைசெய்கின்ற மனிதர்கள்கூட உம் அழகில் மயங்கிவிடுகின்றார்கள்...!" என்று ஏதோ கூறவந்த தேனியாரை இடைநிறுத்தித் திடீரெனக் குறுக்கிட்டது தேன்மலர்.

"என்னைப் புகழ்ந்தென்ன பயன்? — இந்த
மண்ணைப் புகழ்வதே பொருத்தம்
கண்ணைக் கவர் அழகு இந்தச்
கனிவளம் தந்த கொடையாகும்.!"

ஆகா! பிறந்த மண்மீது உமக்குத்தான் எவ்வளவுபற்று.
என்னே அழகு தமிழ். ஆம்! தமிழ்— அது தேன்தமிழ்!
அது நான் உண்ணும் அமுதமல்லவா?
வேருண்ட நீருக்கு வெல்லஞ் சேர்த்து
நானுவந்து தருகின்ற நறுந்தேனும்
நல்லதமிழும் ஒன்றாகும்.

தேனியாரும் தேன்மலரும் இப்படியாக தேன் தமிழுக்கு பெருமையுடன் உரிமை கொண்டாடிக் கொண்டார்கள்.
மலரின் நல்ல தமிழைக் கேட்ட தேனியாருக்கு இன்னும் அழகு தமிழைக் கேட்கும் ஆவல்மேலிடவும் "நீரோ மனிதர்களின் செல்லப்பிள்ளை. ஆகையால் ஒவ்வொருவிதமான மனிதர்களைப் பற்றியும் அறிவீர். அவர்களுடன் நீர் பழகும்போது உமது விருப்பு வெறுப்புக்கள் எப்படி என்று நல்ல தமிழில் கேட்க விரும்புகின்றேன்!"

"கந்தகப் பொடிவாசனை கலந்துவரும் காற்றை
சுந்தரத் தமிழினமின்று சுவாசிக்கையிலும்
பைந்தமிழைச் சுவைக்குப்
உமது ஆவல்கண்டு மகிழ்ச்சி
தாராளமாகக் கேளும்!"" என்று ஆரம்பித்தது தேன்மலர்.

(அடுத்த இதழில் முடியும்)



அன்பு வாசக நெஞ்சங்களுக்கு!

# அன்புடன்...........

கடந்த மாதம் (பங்குனி) 14,15,16ம் திகதிகளில் பூவரசு கலை இலக்கியப் பேரவையின் நூலகக் கண்காட்சியைச் சிறப்புற நடாத்தி முடிப்பதற்கு ஒத்துழைப்புத்தந்த அனைவர்க்கும் முதற்கண் என் மனப்பூர்வமான நன்றிகள்.

புலம்பெயர் மண்ணில் வெளியான, வெளியாகிக்கொண்டிருக்கும் அனைத்துத் தமிழ் இதழ்களும் இக்கண்காட்சியில் இடம் பெற வேண்டும் என்ற எனது ஆவல் முற்றாக நிறைவேறிவிட்டதாகச் சொல்ல முடியாது. இருப்பினும் சஞ்சிகையாளர்களைவிட வாசகர்கள் இதில் அதிக அக்கறை செலுத்தி கண்காட்சியில் அதிக அளவிலான நூல்கள் இடம்பெற உதவினார்கள். இடம்பெற்ற நூல்கள்பற்றிய விபரங்களை அடுத்த இதழில் எழுதுவேன்.
பூவரசு 50வது இதழையும் இந்தக் கண்காட்சியிலேயே வெளியிட்டு வைத்தோம். பூவரசு ஆரம்ப இதழ்தொட்டு இன்றுவரை பூவரசில் படைப்புக்களைப் பிரசவித்த அனைத்துப் படைப்பாளர்களைப் பற்றிய பட்டியல் ஒன்றை கண்காட்சியில் வெளியிட விருந்தேன். இயலாமல் போய்விட்டது. அதுபற்றியும் அடுத்த இதழில் குறிப்பிடுவேன்.
கண்காட்சியில் பல படைப்பாளர்கள்,வாசகர்கள் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்களை தெளிவாக்கினார்கள். அவர்களது கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்பட்டு பூவரசிலும் மாற்றங்கள் செய்யப்படும்.
பூவரசு மேலும் பரவலாகவும்,அனைத்துத் தமிழ் இல்லங்களிலும் அது வாசிக்கப்படவும் உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் உரிமையுடன் கோருகிறேன். பூவரசு பற்றிய உங்கள் கருத்துக்களையும் தயவுசெய்து எழுதுங்கள்.

தொடர்வோம்.

அன்புடன்
இந்துமகேஷ். (ஆசிரியர், பூவரசு)

## *பூவரசு கலை இலக்கியப் பேரவையின்*
## நூலகக் கண்காட்சி.

பிறேமன் புகையிரத நிலையத்தின் முன்னாலிருந்த பஸ் தரிப்பிடம். பிறேமன் ரெனேவரிலிருந்து வரும் பஸ்ஸுக்காகக் காத்திருந்தான் ராகுல். சிறிதுநேரத்தில் பஸ் வர, சனங்களோடு முண்டியடித்துக் கொண்டு ஏறியவனை பஸ்ஸினுள் இருந்து ஒரு தமிழ்க்குரல் அழைக்க.... திரும்பிப் பார்த்தான். அங்கே ரவியும் ரகுவும் அமர்ந்திருந்தனர்.

ராகுல், — ஹலோ...

(அவர்களுக்கு அருகே போய் அமர்ந்துகொண்டான் ராகுல்.)

ராகுல், — எங்க ரண்டுபேரும் போயிட்டு வர்றீங்க.... வெயில் எறிக்க வெளியே வெளிக்கிட்டாச்சா...

ரவி, — அடோ... நாங்க என்ன "சமர்"றிலை சமறுறமென்றாசொல்றாய்... எவ்வளவு நல்லதொரு காட்சியை பார்த்துவிட்டு வருகிறோம். உனக்கு இது எல்லாம் தெரியாது... கிணற்றுத் தவளைபோல வேலை.... வீடு... வேறென்ன தெரியும்...

ராகுல், — கோபிக்காதே... என்ன காட்சி என்றுதான் சொல்லேன்...

ரகு, — மார்ச் 14, 15, 16 திகதிகளில் பிறேமன் ரெனேவர் கலாச்சார நிலைய மண்டபத்தில் பூவரசு கலை, இலக்கியப் பேரவை நடாத்திய நூலகக் கண்காட்சியைப்பற்றிக் கேள்விப்படவில்லையே?

ரவி, — வேறேதாவது காட்சியென்றால் கேள்விப்பட்டிருப்பான்...

ராகுல், — அடடா... அடடா.... மறந்துவிட்டேன்.... இன்றுதான் இறுதி நாளாக்கும்.... அங்கிருந்துதான் வர்றீங்களா...

ரகு, — நல்லதொரு சந்தர்ப்பத்தை இழந்துவிட்டாய்.... இப்படியொரு நிகழ்வை பூவரசு ஆசிரியரின் மேற்பார்வையில், இலக்கியப் பேரவையினர் மிகவும் நேர்த்தியாக ஏற்பாடு செய்திருந்த விதம் பாராட்டத்தக்கது...

ராகுல், — நேற்றுப் போனனீங்களா?

ரவி, — நேற்று மட்டுமல்ல... முந்தநாளும் போனோம்... திருமதி வில்ரூட் கடெல்கா, திருமதி சிவபுஸ்பா இராஜன் ஆகியோர் மங்கள விளக்கேற்ற, பேரவைக்கீதத்துடன் நூலகக் கண்காட்சி ஆரம்பமானது.

ரகு, — முதலில் திரு இந்துமகேஷ் அவர்கள், பூவரசு சஞ்சிகையின் ஆரம்ப நிலைபற்றியும் அது சந்தித்த பொருளாதார நெருக்கடிகள் பற்றியும், இன்று அது இளந்தளிர்கள்... கலை இலக்கியப் பேரவை, பூவரசம்பூ வீடியோ மலர் என விருட்சமாகிவிழுதுகள் விடுவதையும், அதற்கு ஆரம்பத்திலிருந்து இன்றுவரை பூவரசுக்குப் பக்கபலமாக இருப்பவர்களையும் இருந்தவர்களையும்... இன்று பூவரசுடன் தம்மை இணைத்துக் கொள்பவர்களைப்பற்றியும் வரவேற்றுப் பேசினார்...

ரவி, — உண்மைதான்... அங்கே காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ஐரோப்பா, கனடா, அவுஸ்ரேலியா போன்ற நாடுகளிலிருந்து இலங்கைத் தமிழர்களால் அவ்வப்போது வெளியிடப்பட்ட ஏறக்குறைய நூறு வரையிலான சஞ்சிகைகளைப் பார்க்கையில்... அவற்றுள் இன்று எத்தனை வருகின்றன... பெரும்பாலானவை ஏன் நின்று போயின... என்று எண்ணிப் பார்க்கையில்தான் பூவரசு சஞ்சிகையின் வருகையும், அதற்காக திரு இந்துமகேஷ் அவர்களின் விடா முயற்சியும், தனது உரிய நோக்கிற்கான இழப்புக்களைப் பொருட்படுத்தாத தன்மையும் தெள்ளத்தெளிவாகிறது...

ராகுல், — நூற்றுக்கு மேற்பட்ட சஞ்சிகைகளை சேகரித்திருக்கிறாரே... அவற்றின் அறிமுகத்தை பூவரசு வாசகருடன் பகிர்ந்திருக்கிறாரே... அது நிச்சயம் பாராட்டத்தக்கது...

ரகு, — உண்மைதான். புலம்பெயர் தமிழர்களின் வரலாற்றைப் பதிவுசெய்து எதிர்கால சந்ததிக்கு தெரியப்படுத்தும் பாரிய பணியை இச் சஞ்சிகைகள்தான் செய்யமுடியும். அந்த வகையில் சஞ்சிகைகளின் சேகரிப்பும் பாதுகாப்பும் அவசியமானதென்பதை சொல்லாமல் செய்து காட்டியிருக்கிறார் பூவரசு ஆசிரியர்.

ரவி, — அதுமட்டுமல்ல... மலேசியா, இந்தியா போன்ற நாடுகளின் சிற்றேடுகள் சிலவும் அங்கு காட்சிக்கிருந்தன.

ராகுல், — பூவரசில் கையெழுத்துப் பிரதிகள்பற்றிய புத்தகம் ஒன்று விரைவில் வரவுள்ளதாக அறிவிப்பொன்று வெளியாகிக் கொண்டிருந்தது... அது அங்கு வெளியிடப்பட்டதா?

ரவி, — இல்லை. ஆனால் ஆசிரியர் அதற்கு விளக்கமளித்தார்... அதாவது அவர் பலமுறை அதுபற்றி அறிவித்தல் செய்தும் பல சஞ்சிகை ஆசிரியர்கள் அதுபற்றி அக்கறைப்படாதது முக்கிய காரணம்...

ரகு, — பல சஞ்சிகை ஆசிரியர்கள் அதே முகவரியில் இருக்கிறார்களோ... அல்லது அதே நாட்டில் உள்ளார்களா என்பதே கேள்விக்குறி...

ராகுல், — இப்போது கைவசம் உள்ள சஞ்சிகைகளிலிருந்து தரமான ஆக்கங்களை தொகுத்து சஞ்சிகைகள்பற்றிய அறிமுக நூலை வெளியிடலாமே...

ரகு, — அதிலும் ஒரு முக்கிய பிரச்சினை என்னவென்றால், சம்பந்தப்பட்ட சஞ்சிகையாளர்களின் அனுமதியில்லாமல் வெளியிடுவதென்பது சரியில்லை... இதையெல்லாம் ஒரு தனிமனிதராக நின்று நிறைவேற்றுவதென்பது சம்பந்தப்பட்டவர்களுக்குத்தான் விளங்கும்...

ராகுல், — தொடர்ந்து என்ன நடந்தது...

ரவி, — தொடர்ந்து பூவரசின் ஐம்பதாவது இதழை பூவரசின் ஆரம்பகால வாசகர்களில் ஒருவரான திருமதி வசந்தாதேவி புவனேந்திரன் திருமதி. கமலாம்பிகை மகேந்திரமூர்த்தியிடம் கையளித்தார். அத்துடன் திரு. இராஜன் முருகவேலின் 'யவ்வனமில்லாத யதார்த்தங்கள்' என்ற சிறுகதைத்தொகுதி வெளியீடும் நிகழ்ந்தது. அதன் முதற்பிரதியை திருமதி. பெனடிக்ரா ஞானச்செல்வம், திரு. எஸ். தேவராஜா அவர்களிடம் வழங்கினார்.

ராகுல். — இதைப்பற்றி இராஜன் முருகவேல் ஏதாவது கூறினாரா?

ரவி, — அவர் சொன்னதில் முக்கியமான விடயம் என்னவென்றால், திரு இந்துமகேஷ் அவர்கள் எவ்வளவோ ஆக்கங்களை எழுதினாலும், தனது சிறுகதைகளைப் புத்தக உருவில் வெளியிட்ட பெருந்தன்மையையும், புது எழுத்தாளர்களுக்கு அளித்துவரும் ஊக்கத்தைப்பற்றியும் குறிப்பிட்டார்.

ராகுல், — ரண்டாவது நாள் என்ன நடந்தது?

ரகு, — ரண்டாம் நாள் பூவரசு கலை இலக்கியப் பேரவையின் ஊக்குவிப்பில், பிறேமன் முத்துக்கள் மூன்றின் முத்துமாலை வீடியோ மலர் வெளியீடு ஆக்கிரமித்துக் கொண்டது.

ரவி. — ஐரோப்பாவிலேயே மூன்று சிறுவர்களின் உருவாக்கத்தில் முதல் தடவையாக வெளிவந்திருக்கும் இந்த வீடியோ மலரின் முதற்பிரதியை திரு இந்துமகேஷ் அவர்கள் உலகத் தமிழர் இயக்க செயலாளர் திரு இரா. சோமஸ்கந்தா அவர்களிடம் கையளித்தார்.

**யௌவனமில்லாத யதார்த்தங்கள்**

பூவரசு கலை இலக்கியப் பேரவையின் தொடரும் பணிகளுள் ஒன்றான புதிய படைப்பாளர்களின் ஆக்கங்களுக்குப் பிரசுர வாய்ப்பளிக்கும் நடவடிக்கையின் முதல் முயற்சியாக இராஜன் முருகவேலின் யௌவன மில்லாத யதார்த்தங்கள் என்னும் சிறுகதைத் தொகுதி நூலகக் கண்காட்சியில் வெளியிடப் பட்டது.

இவரது ஆக்கம் புத்தக உருவில் வருவது இதுவே முதல் தடவையாகும்.

இதில் பத்து சிறுகதைகள் அடங்கியுள்ளன. இவை 1990– 1993 காலப்பகுதியில் எழுதப்பட்டவையாகும்.

திரு. இந்துமகேஷ் அவர்களின் முன்னுரை யுடன் கூடிய இச் சிறுகதைத் தொகுப்பை பூவரசு சஞ்சிகையுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.



ராகுல். — முத்துக்கள் மூன்று என்று பெயர் சூட்டியதே பூவரசு ஆசிரியர்தானே?!

ரவி, — ஆமாம்... அவரால் பெயர் சூட்டப்பட்டவர்களின் வெளியீட்டுக்கு இடமளித்தது ஆசிரியரின் இளந்தளிர்களான எதிர்காலத் தமிழர்களின் மீதுள்ள அக்கறைக்கு அச்சாரமாக திகழ்ந்தது.

ரகு. — மூன்றாவது நாள் பூவரசு கலை இலக்கியப் பேரவையினர் பலர் பங்குகொண்ட "புலம்பெயர்ந்த தமிழரிடையே மனிதநேயம் வற்றுகிறதா?" என்னும் தலைப்பிலான கருத்தரங்கு பலரது கருத்துப் பரிமாற்றங்களுடன் கனதியாக இடம்பெற்றது.

ராகுல், — இந்தக் கருத்தரங்கின் முடிவு எப்படியிருந்தது?

ரகு, — எப்படியிருக்க வேண்டும்? இது ஒரு கருத்துப் பரிமாற்றத்துக்கான முன்னெடுப்பு மாத்திரமே. இது பூவரசிலும் தொடர்ந்து வருவதன் மூலம் வாசகர்களையும் மனிதநேயம்பக்கம் சிந்திக்கத் தூண்ட வேண்டுமென்பது எனது கருத்து.

ரவி, — இறுதியாக பூவரசு ஆசிரியரின் நன்றியுரையுடன், பூவரசு கலை இலக்கியப் பேரவையினரின் மூன்று நாள் நிகழ்ச்சிகள் நிறைவுற்றன. இப்படியானதொரு நிகழ்வு இலக்கிய ஆர்வலர்கள், ஆய்வாளர்கள், வாசகர்கள் மத்தியில் ஒரு இறுக்கமான நெருக்கத்தையும் — புரிந்துணர்வையும் ஏற்படுத்துமென்றால் மிகையாகாது.

ராகுல், — அதுமட்டுமல்ல.... இவ்வளவு சஞ்சிகைகளைச் சேகரித்து காட்சிக்கு வைத்த செயலானது, புதிய சஞ்சிகைகளின் வரவிற்கும், தம்மை மற்றவர்கள் அவதானிக்கிறார்கள் என்ற நினைவால் — அவை காத்திரமாவதற்கும் ஏதுவாகும்....

ரகு, — உண்மைதான்.... இப்படியான செயல்களால் பூவரசு தனது பணிகளில் தொடர்ந்தும் உத்வேகத்துடன் முன்னேற — வாசகர்கள்... எழுத்தாளர்கள் என்று சகல புகலிடத் தமிழர்கள் யாவரும் பூவரசு கலை இலக்கியப் பேரவையில் இணைந்து, பூவரசு ஆசிரியரின் கைகளை இறுகப் பற்றிக் கொள்ளவேண்டும்.

ராகுல், — தற்போது நான் உங்களின் கைகளைப்பற்றிக் குலுக்க விரும்புகிறேன்.... நான் இறங்கவேண்டிய இடம் வந்துவிட்டது...

அவதானி.

*வேலணையூர் பொன்னண்ணா*

# எங்குதான் செல்வாய் இனி?

கோழியின் செட்டைக்குஞ்சாய் வாழ்ந்திட்ட காலம்போய்
தொட்டால் நெருப்பாய், சூழ்ந்தால் வேங்கையாய்
சுடர்விடும் தமிழா!
எங்குதான் செல்வாய் இனி?
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

குந்தியிருந்தது சொந்தமண்-அங்கே
கொடியவன் படை குவிந்தது!
கோழிக்குள் குஞ்சாய் வாழ்ந்திட்ட நாமும்
குடிபெயர்ந்தேகினோம் கிடைத்ததா நிம்மதி?
எங்குதான் செல்வாய் இனி?
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

தமிழன்னை விலங்குடைக்க படையமைத்து வந்த சிலர்
பதவிக்காய் எதிரியவன் பாதத்தைக் கழுவுகிறார்!
ஆனால்-
அன்னைமொழியை அவர்தம்மினத்தைக்காக்க
அணிகொண்டேகி படைதிரட்டி
உயிரைக்குண்டாய் சுமக்கும் தம்பி
உத்தமன் படைவழி செல்லாமல்...தமிழா!
எங்குதான் செல்வாய் இனி?
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

அழுகிவிட்ட கனிகளுக்கு அரசமரியாதை
புழுதிகொண்ட நாய்நரிக்கு போர்த்துகிறார் பொன்னாடை
ஈயமதை வெள்ளியென்று இதுவரையும் நம்பினோம்
ஈன்ற தாயை விற்கும் மகன் இன்று நாமும் காண்கிறோம்
தாயின் மானம் காக்கா(த)பிள்ளை
தமிழைக்காக்கும் வேலியா?
இத்தனையும் கண்டு நீயும் மௌனியாகி நிற்பதோ?
எங்குதான் செல்வாய் இனி?
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

முறைகெட்ட செயலுக்கு முடிவு கேட்பேன்
குறை கண்டால் கொதித்தெழுவேன்
கொடுமைக்கு துணைபோகேன் என்ற பொலிஸ்
யு.எஸ்.ஏ. என்கின்ற உலகப் பொலிஸ்
பறிகொடுத்த உரிமைதனை எதிரியிடம்
பறிப்பதற்கே போராடும் எம் தமிழர் படையை
இனம் காணத் தான் மறுத்து- நரிக்குணத்தில்
பழிசெய்வோர் பட்டியலில் சேர்த்திட்ட செய்திகண்டு
திரைகிழிக்கும் பணிமுடித்து-தமிழா!
எம் மண்மீள் படை களங்கமது போக்காது
எங்குதான் செல்வாய் இனி?
எங்கள் சுதந்திரமண்ணை மீட்பதே பணி!

பனிபடரும் வீதியெல்லாம்
பக்தரெலாம் உருளும் பக்திநிலைவளர- பக்தர்
பாலோடு மிளகு தின்று தம் பக்திதனை வளர்த்திருக்க
ஆலயங்கள் தம்பணியை ஆர்வமுடன் செய்திருக்க
மாற்றுமதம் வந்து வாசல்மணி அடித்தவுடன்
காற்றதுபோல் வந்து காரேறித்தான் செல்லும் இந்துவே!
நம்பிக்கை ஒன்றே அருள்தரும் தும்பிக்கை என்றெண்ண
எங்குதான் செல்வாய் இனி?
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

பிறந்த மண் பாசம் நுகர்ந்திடா பிரித்து
பறந்தோம் நாம் நம் பரம்பரை கொண்டு!
வாழ்ந்திடும் மண்ணிலும் பாசம் நுகர்ந்திடும்
வழியதைத் தடுக்கிறோம் நம்தமிழ் நடைமுறைகொண்டு
நாளை பரம்பரை நடுக்கடல் தனிலா?
நாடி நீ பணிதொடு நம் பரம்பரை வாழ்ந்திட
எங்குதான் செல்வாய் இனி?
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

தாய்நாட்டு மண்கடந்தோம் தரணியிலே அகதியாக...!
அகிலத்து பெரும் நாடெல்லாம்
அலைந்திட்டோம் கடந்திட்டோம் சுகம்தேடி
கிடைத்ததா சுகம் இங்கே...?! எம்
சுதந்திர தாய்மண்ணில்
சுவாசித்த காற்றுத்தானும்.
எங்குதான் செல்வாய் இனி?
எங்கள் சுதந்திர மண்ணை மீட்பதே பணி!

பூவரசு 7வது ஆண்டு நிறைவுப் போட்டியில்
முதற்பரிசுபெற்ற கவிதை

*எழிலன் எழுதிவரும்........*

# சத்தியத்தின் சுவடுகள்

*சுவடு பதின்மூன்று*

## பலவீனமே எதிரியின் பலமாகும்

காலம் காலமாக எதிர்காலம் தெரியாமல் , எதிர்காலத்தை நினைக்காமல், எதிர்காலத் தேவையைக் கவனிக்காமல்,நடந்து கொண்டிருப்பதே தனது தலைவிதி என்று தன்னையுணராமல் சென்று கொண்டிருக்கிற எந்தச் சமுதாயத்தின் நிகழ்காலமும் தன்னம்பிக்கையற்ற, பலவீனமான சிந்தனையிலே மட்டுமே உழன்று கொண்டிருக்கும்.

அந்த பலவீனத்தையே எதிரியானவன் தனது பலத்தின் இருக்கையாகக் கணித்துக் கொண்டிருப்பான். என்றைக்கு அந்தச் சமூகம் தனது தனித்துவத்தைத் தற்காக்கத்தக்க சிந்தனைத் தெளிவைப் பெறத் துவங்குகின்றதோ அன்றைக்கே எதிரியின் பலம் சூரிய ஒளி முன் தாக்குப்பிடிக்க முடியாமல் கரைந்தோடும் பனியைப் போல குறையத் தொடங்கிவிடும்.

அதனால்தான் சுதந்திர வேட்கையாளர்கள் புஜபலபெருக்கினை நடைமுறைப் படுத்துவதற்கு முன்பாக மக்களின் கண்களை மூடிநிற்கின்ற மாயைகளை, பொய்மைகளை, ஏமாற்றுக்களை முதன்முதலில் அகற்ற முயல்கின்றார்கள். அப்படி செய்யாவிட்டால் வீறு கொண்டெழுவதாகக் காட்டிக் கொள்ளும் ஒரு சமூகத்தின் போராட்டம், எழுந்த வேகத்திலேயே வீழுந்துவிடும்.



காரணம்,அப்போராட்டமானது உள்ளார்த்தமாக உணராத ஒரு கொள்கைக்காகத் தொடர்ந்து நிமிர்ந்து நிற்கும் திராணியைக் கொண்டு இருக்காது.

பயமூட்டப்பட்டால் நடுநடுங்கி, அடங்கி, ஒடுங்கி அடிமைத்தனத்தைத் தெரிந்தே அங்கீகரித்தும் கொள்ளும் பலவீனம் மிகுந்த பட்டாம்பூச்சியாகவே அது இருந்து கொண்டிருக்கும்.

அன்றைய தென்னாப்பிரிக்க மக்களும் இந்த வீதிக்குள்ளேயே சிக்கியிருந்ததால் தனித்தனியாகவல்ல, முழுச்சமுதாயமாகவே அனைவரும் அடிமைப்பட்டிருந்து வந்ததை கறுப்பர் விழிப்புணர்வியக்கம் தெட்டத்தெளிவாக மக்களை உணர்ந்து கொள்ள வைக்கும் முயற்சியில் ஈடுபட்டது.

சரித்திர ரீதியாக, அரசியல் ரீதியாக, சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக உரிமை மறுக்கப்பட்ட, அதிகாரமிழக்க வைக்கப்பட்ட இனத்தவர் நாம் என்ற உணர்வைக் கறுப்பின மக்கள் மத்தியில் ஆழ ஊன்ற வைத்து, அதைத் தகர்த்து எறிய, மக்கள் இணைந்து எழ, விதைக்கப்பட்ட சிந்தனை விதைகள் வேர்விட்டு வளர ஆரம்பித்துவிட்டதன் அடிப்படையாக அவர்களுக்காக பலம் வாய்ந்த அத்திவாரம் போடப்பட்டாயிற்று. அதனால் தமது சுய மரியாதையை ,கௌரவத்தைத் தாமே முதலில் தம்மை மதித்துக் கொள்ளவும் தமது மக்களின் கூட்டான எழுச்சிக்கு உறுதுணையாக நிற்கவும் வேண்டியதன் அவசியத்தைப்பற்றி மக்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள்.

பாதிக்கப்பட்டவனின் மனப்பயமே பாதிப்பைத்தருபவனின் பலமென்றவுண்மையை வெள்ளையாட்சியாளர்கள் தெரிந்து வைத்திருந்ததால் மக்களின் எதிர்ப்புணர்வுக ளைக் கடும் அடக்கு முறைகளால் அடிமைத்தனமே நமது கடமை என்று நம்புமளவுக்கு அவர்களை ஆக்கிவிட்டிருந்தார்கள்.

புதிய சிந்தனை மாற்றமானது ஒவ்வொரு கறுப்பினனும் தன்னைத் தானென்றும் எந்த அன்னிய இயந்திரத்துக்கும் அடிமைப்பட அவசியமற்ற சுயசக்திமிக்க தனிமனிதன் என்றும் உணர்ந்து கொள்ள வைத்தது.

இந்த வளர்ச்சியானது எவனுக்கும் தலைவணங்காத துணிவுணர்வை ஊட்டிவளர்க்கத் தொடங்கியதால் கறுத்த இனத்தவனினுள் மறைந்திருந்த உண்மை மனிதன் ஒளிர்விட்டு வெளிவரத் தொடங்கினான்.

பிக்கோ வளர்த்துவிட்ட சிந்தனைத் தெளிவின் தாக்கம் எப்போப்பட்டதாக இருந்ததென்றால் இதர கறுப்பின சார்பியக்கங்களும் இந்த அடிப்படையிலேயே சிந்திக்கும் நிலையை உருவாக்கி விட்டமைதான்.

எதிலும் எதற்கும் வெள்ளையரை அண்டியும் அவர்களைக் கலந்து கொண்டும் அவர்களின் ஆலோசனைப்படியும் நடந்து வருவதே சரியென்பதாகப் படிந்திரு சிந்தனைக் கறையை நீக்கிவிட்டு அவர்களை விலக்கித் தனித்திருந்து தமது தனித்துவத்தை நெறிப்படுத்த அவர்கள் முற்பட்டார்கள்.

*வெள்ளையன் வந்து நம்மோடு அமர்ந்து கொள்கிறான். அவனுக்கு அதற்கு உரிமை கிடையாது என்பது நமக்குத்தெரியும். அவனை அதனை விட்டு அகற்றிவிட்டு அவனால் வைக்கப்பட்டு இருக்கிற அத்தனை தடைகளையும் விலக்கி விட்டு சுத்தமான ஆபிரிக்க அலங்காரத்தால் நாமே அதை அழகு படுத்தி விட்டு அவனை அழைத்து விரும்பினால் நமது திட்டத்துக்கேற்ப பங்குகொள்ள அவனை அனுமதிக்க வேண்டும்.*

அதாவது நமது உரிமையை நாமே வைத்துக் கொண்டு நமது தனித்துவத்தை இழந்துவிடாத விதத்தில் அவனும் நம்மோடு பங்கு கொள்வதில் ஆட்சேபணை இல்லை என்ற நிலைப்பாட்டை நோக்கி புதிய சமுதாயம் அடிவைக்கத் துவங்கியது.
இலங்கைத் தீவின் தமிழ் மக்களின் நிலைப்பாட்டுடன் இந்த நிலைமையை ஒப்பீட்டுப் பார்க்க முனைந்து பார்த்தால்... அப்படித்தானே!இப்போது அங்கே நடக்கத் துவங்கியுள்ளது என்று யாரோ உள்மனத்தார் உணர்த்துவது போலில்லை?

* * * * * *

வேகமாகப் போய் கொண்டிருந்த தமது வாகனத்தின் வேகத்தை அடிக்கடிக் குறைத்தும் கூட்டியும் தமது மனவோட்டத்துக்கேற்பவே ஓட்டிச் சென்று கொண்டிருந்தார் திரு.டொனால்ட். பிக்கோவைச் சந்தித்துவிட வேண்டும் என்ற ஆவல் ஒருபுறம் பிக்கோவின் கொள்கை உண்மையான துவேஷ மறுப்பாளர்களான வெள்ளையர்களின் இதய சுத்தியை மதிக்க மறுக்கின்றதே



என்ற ஆத்திரம் அவருக்குள் எழுந்து அவரை பொறுமையிழக்க வைத்துக் கொண்டிருந்தது.

பெற்ரிக் டன்கன் பீற்றர் பிறவுண் இன்னும் எத்தனையோ வெள்ளைரான இனத்துவேஷ எதிர்ப்பாளர்கள் இவர்களுக்காகச் சிறைப்பட்டிருக்கிறார்கள்.இல்லச் சிறை செய்யப்பட்டு தமது துவேஷமறுப்பு என்ற கொள்கைக்காகவே உரிமை மறுக்கப்பட்டிருக்கிறார்கள்.அலன் பெற்றன் எத்தனை ஆண்டுக் காலமாய் இரகசியப் பொலீசாரால் வேட்டையாடப்படத் துரத்தித் துரத்திச் செல்லப்பட்டிருக்கிறார்?

எந்த தர்க்க அடிப்படையில் அவர்களை ஆட்சியாளரிடம் இரகசியமாகவோ மனசாட்சியை அடகுவைத்தோ சலுகையனுபவிக்கின்றார்கள் என்று இவர்கள் கூற முடியும்? எல்லா வெள்ளையரையுமே ஒட்டுமொத்தமாகக் குற்றவாளிக் கூண்டிலேற்றும் கொள்ளை நியாமானதா? என்றெல்லாம் அவரது சிந்தனை கொதித்துக் கொப்புளித்துக் கொண்டிருந்தது.

அநேக மிதவாத வெள்ளையர்கள் அரச சலுகைகளைப் புறக்கணிக்கிறவர்கள்.வெள்ளையர்க்கு மட்டும் என்றிருக்கும் கடற்கரைகளையும் உணவகங்களையும் திரையரங்குகளையும் அவர்கள் பகிஷ்கரிக்கிறார்கள். இவர்கள் புதிதாகப் பிறக்கும் ஒன்றுமறியாத பச்சைக்குழந்தையைக்கூட வெள்ளையர் சுகவுரிமையிக்குள் பிறந்ததாக சபிப்பது என்ன நியாயம்? இவையெல்லாம் வெறும் இளைய சமுதாயத்தின் மிதவாத நோக்கின்மையின் பலவீன வெளிப்பாடுகளே!

திரு டொனால்ட் தமக்குள்தாமே சொல்லிக்கொண்டே வாகனத்தின் வேகத்தைக் கூட்டிக் கொண்டார்.

தாம் ஒப்பீட்டு நோக்கிய அன்பர்களுடன் தம்மையும் அவர் ஒப்பீட முனைந்தபோது அவருக்கு ஓர் உண்மை புலப்பட்டது. ஒரு சிலராக க் குறிப்பிடத்தக்க அந்த நல்லவர்கள் தவிர மேலும் பலர் பிக்கோவின் சிந்தனை சுட்டிக்காட்டிய பக்குவமான அதாவது வெள்ளைச் சட்டத்தின் சுகங்களை அனுபவித்துக் கொள்வதில் குறை வைக்காமல் இருந்துவருவதோடு கறுப்பினத்தவர்க்காகக் குரல் எழுப்புவதானதும் பொய்யல்ல என்று புரிந்தது அவருக்கு. தாமே

அப்படித்தானே இருப்பதை அவரே உணர்ந்து கொண்ட போது ஒரு விதத்தில் தம்மை தமது குற்றமாகவே அவர் உணர்ந்தார்.

இருந்தபோதும் வெள்ளை இனவாதக் கொள்கையை அணுகும் விதத்தில் முழு வெள்ளையரையுமே முற்றாக ஒதுக்கிவிட்டுத் தனிக்கறுப்பருக்கே தென்னாப்பிரிக்கா என்ற அணுகுமுறையை அவர்கள் நாட முற்படுவதைத் தாம் மூர்க்கமாக எதிர்த்து வாதிட சங்றபம் கொண்டவராக அவர் தீர்மானமெடுத்துக் கொண்டார்.

அவர்களது கொள்கை தம்மையுமே கூட தாக்க முனைவதை அவர் உணர்ந்தார். நானும் இம்மண்ணின் மைந்தன்தானே. வெறும் பிறப்பின் விபத்தின் அடிப்படை மன்னிப்புக்கேட்க அவசியமென்ன எனக்கு என்று அவர் கொதித்தார்.

ஒரு முழு அளவிலான எதிர்ப்பினை நேரிலேயே காட்டி வாதிட கிடைத்துள்ள சந்தர்ப்பத்தின் ஆரம்பம் எப்படியிருக்கும் என்று அவர் மனம் கற்பனை பண்ணிக் கொண்டு இருந்தது.

**கிங் வில்லியம்ஸ் டவுண்.**
காலனிக்கவாதத்தின் கால்பதிந்த சிறிய நகரம் அது.கட்டிடங்களும் சுற்றாடல் அமைப்பும் அந்த சிறிய நகரத்தை அழகு படுத்திக் கொண்டிருந்ததென்னவோ உண்மைதானென்றாலும் அவ்வழகு அம்மண்ணின் பூர்வீக கலாச்சார எழிலினை மறைத்துக் கொண்டிருந்ததென்னவோ உண்மைதான்.

அன்றைய தீவிர கறுப்பின மக்களின் வெள்ளையராட்சிக்கெதிரான எதிர்ப்பியக்கத்தின் தலைமையகம் அங்கேதான் அங்கிருந்த கட்டிடங்களுக்கிடையிலேதான் இயங்கிக் கொண்டிருந்தது.

அங்கு வாழ் மக்கள் நல்லவர்களாகவும் தங்கள் அப்பாவித்தனத்தாலும் அறியாமையாலும் தாங்கள் செய்யும் தவறையுணராமலே ஒரு " வீரியனைத்" தம்மத்தியில் ஏற்று பாதுகாத்துக் கொண்டிருந்தார்கள் என்றும் பீக்கோவை வைத்து திரு.டொனால்ட் கணிப்பீட முற்பட்டவராக அந்நகருக்குள் நுழைந்த

பீக்கோவை அவர் சந்திக்கும் ஏற்பாடு நடந்து முடிந்ததும் அவருக்கு பீக்கோவைச் சந்திக்க வேண்டிய விபரம் வழங்கப்பட்டிருந்தது.



அரசுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்ட பீக்கோ மீதான தடைச் சட்டம 1973ல் பீக்கோவை கிங் வில்லியம்ஸ் டவுண் எல்லைக்குள் நீதிபரிபாலன எல்லைக்குள் மட்டுமே இயங்கும் வண்ணம் கட்டுப்படுத்தியிருந்ததால் அவர் கறுப்பின சமூக நலத்திட்டங்களின் அமுலாக்க அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டு வந்தார்.

அவரை திரு. டொனால்ட் சந்திக்க வேண்டிய முகவரியைத் தேடியபோது அவர் தேடிய இலக்கத்தில் அலுவலகத்துக்குப் பதிலாக ஒரு கோயிலே இருந்தது அவருக்கு அதிர்ச்சியைத் தந்தது.

சந்தேகம் மேலிட அவர் மெதுவாகக் கதவைத் தட்டினார்.
உடனடியாகவே கதவு திறந்து கொண்டது. அவரை எதிர்பார்த்தே இருந்ததுபோல் பல இளம் கறுப்பினர் நின்று கொண்டிருந்தார்கள்.

சிறிய அதிர்ச்சி.
அன்றைய சாதாரண வெள்ளையர்க்கேயுரிய அச்சவுணர்வுடன் சற்று பின்வாங்கிய அவர் தம்மை நிதானித்துக் கொண்டார்.
சுற்றிலும் சுழன்றன அவர் வழிகள்.

கோவிலா அது? இல்லவே இல்லை.அது ஒரு முழுமை பெற்ற நிர்வாக அலுவலகத்துக்கான சகல உபகரணங்களுடனும் அமைந்திருந்தது.

அவர் தம்முள்ளுணர்வின் சந்தேகத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் பீக்கோவைப் பற்றிக் கேட்டார்.

அவ்வளவுதான். அந்த அலுவலகங்களுக்கூடாக அவரை உடனடியாகவே அந்தக் "கோவிலின்" பின்பக்கத்து வளவுக்கு அழைத்துச் சென்றார்கள்.

ஏதோ இனந்தெரியாத ஒருவித பதட்டவுணர்வு தம்மை ஆட்கொள்வதை அவர் உணர்ந்தார். அரசினால் " தடைசெய்யப்பட்ட மனிதரைச்" சந்தித்தால் அந்நாட்களில் கடும் பின்விளைவுகள் ஏற்படும் ஆபத்து நிறைந்திருந்தது.. அவ்வாறு தடை செய்யப்பட்டவர்களுக்கு ஒரு நேரத்துக்கு ஒருவருடன் மட்டுமே பேச முடியும்.அவரது நிலைமையை சுட்டிப் பேசவும் தடையிருந்தது. பாதுகாப்பு அதிகாரிகளின் தொடர்ந்த கண்காணிப்பு வேறு ஆபத்தை அழைத்துவிடும்.

பெரிய ஆவலுடன் சந்திக்க வந்தவருக்கு இப்போது ஏனோ ஒரு தடுமாற்றமான நிலை ஏற்பட்டுக் கொண்டிருந்தது.

சரி பிழை பாராமல் யார் எவர் என்று தேடாமல் வெள்ளையரனைவரையுமே ( அரச ஆதரவாளர்களையும் எதிர்ப்பினரையும் ஒரே தட்டில்வைத்து ) ஒதுக்கி நிற்கும் சிந்தனை வட்டத்துக்குள் சுழலும் ஒரு குறுகிய மனதினனான பிக்கோ ஏன் தன்னை இப்படித் தனியாகச் சந்திக்க வேண்டும்?

"அனாவசியமான பிரச்சினை இது. சந்தித்துப் பேச வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துதான் வந்து இருக்கிறேன். அதற்குள் அதை இதை நினைத்துக் குழம்பினால்?" மனம் உணர்த்த சூழலை அவதானிக்கத் துவங்கினார் அவர்.

ஒரு சிறிய பகுதி. களைகள் மண்டிக் கிடந்தன.ஒரு நெடிதுயர்ந்த மரம் அவ்வளவிற்குள் வளர்ந்து அக்கோவிலுக் கெதிர்ப்புறத்தில்வளைந்து நின்று கொண்டிருந்தது. அங்கே மூன்று அலுவலகங்களும் ஒரு முன்வளவுமாக அக்கோவிலின் பின்பக்கம் அமைந்திருந்தது.

அந்த முன் வளவின்...விறாந்தையின் நடுவில்.......

அந்த மாபெரும் மனிதன் நின்று கொண்டிருந்தான்.
ஆம். உடலமைப்பிலே பெருங்குத்துச் சண்டை வீரனையொத்த உயர்ந்த உருவமும் பரந்த மார்பும் திரண்ட தசைகளும் நிமிர்ந்த பார்வையும் தீட்சண்யமா நோக்கும் பிரதிபலிக்க .....

பிக்கோ நின்று கொண்டிருந்தான். டொனால் ஒரு கணம் தம்மோடே அவனை ஒப்பிட முனைந்து கொண்டார்.

அழகான ஆஜானுபாகுவான தோற்றம். வாவென்று அழைப்பதாகவல்ல.. வந்துவிட்டதற்கு மகிழ்ச்சி என்பதாக அவனது ஒளிர் முகம் புன்முறுவலால் பேசிக் கொண்டிருந்தது.

சாதாரணமாகவே வளர்ந்து திரண்ட வெள்ளையரான டொனால்டையும்விட பிக்கோ சில அங்குலம் உயர்ந்த உடலமைப்புக் கொண்டவனாக இருந்தான். அருகில் நெருங்கிய அவனது வலக்கரம் முன் நீண்டது.



கைகள் குலுங்கிக் கொண்டன.

பலமான உறுதியான சதைப்பிடிப்பான அவனது வலக்கரம் குலுக்க இடக்கரம் உள் அறை நோக்கி அவரை அழைத்தது.

அவனது அலுவலகமாகத் தோன்றிய அதற்குள் இருந்த சோபாவை அவருக்கு அமரச் சொல்லிக் காட்டியபின் அவருக்கெதிராக ஒரு நாற்காலியை இழுத்துக்கொண்டு அமர்ந்து கொண்டான்.

அவன் அமர்ந்திருந்த விதம்? ஒரு சவாலுக்கு நிற்கும் தோரணையில் இருந்தது.

ஏற்கனவே இதை எதிர்பார்த்திருந்தவர்தானே டொனால்ட். தம்மை அந்தச் சவாலுக்கு ஏற்ப தயார்படுத்திக் கொண்டார்.

"உங்கள் விழிப்புணர்வியக்கத்தின் போக்கு மிதமிஞ்சிய கறுப்பரினத் துவேஷத்தைக் கொண்டியங்குவதாக என் கருத்துக்குப் படுகின்றது.நான் ஆதரிக்காத கறுப்பினத் துவேஷத்துக்காக வெள்ளையனாக நான் பிறந்ததையிட்டு மன்னிப்புக் கேட்கவோ வருந்தவோ தேவையில்லை அல்லவா?"

டொனால்டின் குரல் தடித்திருந்தது. ஆனால்....
பிக்கோ மிகவும் நிதானமாக அதனைச் செவிமடுத்துக் கொண்டேயிருந்தான். அவர் பேசப் பேசப் பொறுமையுடன் இருந்த அவன் முகம் அவர் பேசிமுடிய சட்டென மாறத் துவங்கியது.

டொனால்ட் அவனெழுதியிருந்த கட்டுரையைப்படித்துவிட்டே அப்படிக் கருத்தை வெளியிட்டார் என்பதை அவன் விளங்கிக் கொண்டதை முகம் காட்டியது. தனது இருபதாம் வயதாரம்பத்தில் எழுதப்பட்டிருந்த அந்தக் கட்டுரை பற்றி அவன் அவருக்கு சிறு விளக்கம் அளிக்கத் தீர்மானித்தான். அவனது முகத்தில் கோபமோ வெறுப்போ பகைமையோ காணப்படவில்லை. ஆனால் தனது பாதையின் அடிப்படையில் தெட்டத்தெளிவாகத் தான் இருப்பதை அவன் தன் எதிரில் இருக்கும் ஒரு சமூகத் தொடர்பாளரிடம் விளக்கமாக எடுத்தியம்ப விரும்புவதை அவனது முகம் பிரதி பலித்தது.

தொடரும்..

# மண்ணும் மனிதமும்.

- பூனகர் ரவி.

இந்த மண்ணில் மனிதத்தைத் தேடுகின்றேன்.
குறுகிய அளவில் அல்ல, பரந்த அளவில் உலகளாவிய அளவில் மனிதத்தைத் தேடுகின்றேன்.
எங்கும் என்னால் மனிதத்தைக் காணமுடியவில்லை.
உலகின் எந்தமூலைக்குத் திரும்பினாலும் வன்முறை,போர், அமைதியின்மை, அச்சுறுத்தல், அசுத்தம், நோய்கள், ஒழுக்கச் சீர்கேடுகள்தான் மேலோங்கி நிற்பதைக் காண முடிகின்றது.
விசனகரமான போர் உலகளாவிய அளவில் பெருகியிருக்கின்றது. 1993ல் 79 நாடுகளில் இரத்த ஆறு ஓடியது. அங்கோலாவில் 30 ஆண்டுகளிற்கு மேலாகவும் ஆப்கானிஸ்தானில் 17ஆண்டுகளாகவும் இலங்கையில் கூர்மையாக 11ஆண்டுகளாகவும் சோமாலியாவில் 7 ஆண்டுகளாகவும் சண்டைகள் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.
இலங்கையில்மட்டும் இதுவரை இறந்தவர்களின் எண்ணிக்கை ஐம்பது ஆயிரத்தைத் தாண்டிவிட்டதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.
கடந்த பத்து ஆண்டுகளில் உலகளாவிய போரில் 20இலட்சம் பிள்ளைகள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். 50இலட்சம் பிள்ளைகள் போர் அனாதைகள் 1.2கோடி பிள்ளைகள் வீடற்றவர்கள். இந்த இலட்சணத்தில் மனிதத்தைப் பற்றி எந்த மனிதனுடன் கதைப்பது?
வன்முறைகளின் காரணமாக 5.3கோடி மக்கள் தங்கள் மண்ணைவிட்டு ஓடியிருக்கின்றார்கள். பூமியில் இருக்கும் 115 மக்களிற்கு ஒருவர் என்றவகையில் அகதிகள்.
மண்ணில் மனிதன் கால்பதிப்பதற்கே கதி கலங்கவேண்டியுள்ளது.
மூலைக்கு மூலை கண்ணிவெடிகள்.
ஒவ்வொருமாதமும் கண்ணிவெடியில் சிக்கி 800 மனிதன் மரணிக்கின்றான்.
64 நாடுகளில் ஒட்டுமொத்தமாக சுமார் 11கோடி கண்ணிவெடிகள் நிலத்தில் புதைக்கப்பட்டுக் கிடக்கின்றன.
கம்போடியாவில்மட்டும் 70 இலட்சம் கண்ணிவெடிகள் மண்ணில் புதைந்து கிடக்கின்றது.
இந்த நிலையில் இந்தமண்ணில் மனிதத்தைத் தேடுவதா?
இல்லை கண்ணிவெடியைத் தேடுவதா?



40இற்கும் மேற்பட்ட நாடுகள் 340 வகையான கண்ணிவெடிகளை உற்பத்தி செய்கின்றன.
ஒரு கண்ணிவெடி உற்பத்திசெய்யச் செலவு 3$.
இதை நிலத்தில் இருந்து கண்டுபிடித்து அகற்ற 300 இலிருந்து 1000 $ செலவு ஏற்படுகின்றது. கண்ணிவெடிக்கு இராணுவம் ஏது? மனிதன் ஏது? மிருகம் ஏது?
எல்லோரையுமே ஒட்டு மொத்தமாகக் கொன்று குவிக்கின்றது.
இவற்றில் சில 50ஆண்டுகள் தாண்டியும் செயல் இழக்காமல் கிடக்கின்றன.
"வேல்ட் வோச்" என்ற பத்திரிகை இந்தத் தகவல்களைத் தந்ததுடன் இந்த நூற்றாண்டுதான் அனைத்தைக் காட்டிலும் அமைதி குன்றியதாய் இருக்கின்றது எனக் கூறியுள்ளது.
பல கோடி மக்கள் வாழ ஏற்புடையதாய் இருப்பது இந்த பூமி என்னும் கோள்தான். ஆனால் மனிதன் மனிதத்தை இழந்து சுயநலம் பேராசை காரணமாக இந்த மண்ணை நாசமாக்கிக் கொண்டிருப்பதில் இருந்தே இந்த மண்ணில் மனிதம் சாகடிக்கப்பட்டுவிட்டது என்று எண்ணத் தோன்றுகின்றது.—
கடல்கள் இன்று உலக நாடுகளின் அணு ஆயுத குப்பைத்தொட்டியாக மாறியுள்ளது. மதிகெட்ட மீனவர்கள் மீன்களைப் பிடிக்க இரசாயன கலவைகளையும் வெடியையும் பாவிப்பதனால் கடல்வாழ் உயிரினங்கள் ஒட்டுமொத்தமாக அச்சுறுத்தப்படுகின்றன.
ஆலைகளின் அதிகரிப்பால் சுத்திகரிக்கப்படாத அசுத்தநீர் ஆற்றுடன் கலந்து ஆறுகள் எல்லாம் அசிங்கப்படுத்தப்பட்டுவிட்டன.
இந்த மண்ணின் மகிமையைப் பாதுகாக்கும் மரங்கள் இந்த மண்ணின் மைந்தர்களிடம் மனிதம் அற்றுப்போய்விட்டமையால் கண்மூடித்தனமாக அழிக்கப்படுகின்றன.
இந்த வேகத்தில் மழைக்காடுகள் அழிக்கப்பட்டால் தட்ப வெப்ப நிலையில் மாற்றம் ஏற்பட்டு பல நாடுகள் பாலைவனமாகிவிடும் என்று எச்சரித்துள்ளார் வின்சன் என்னும் விஞ்ஞானி.
'உலகமக்கள் தொகையில் 5/1 பங்கினர் 100கோடிக்கும் அதிகமானோர் ஒவ்வொரு நாளும் பட்டினி கிடக்கின்றனர். 200கோடி மக்கள் ஊட்டக் குறைவால் பாதிக்கப்படுகின்றனர். இன்றும் உலகில் 20கோடிமக்கள் அடிமைகளாக வாழ்கின்றார்கள்'என்று "அடிமையாக்கப்பட்டோர்" புத்தகத்தில் 'கார்டன் தாமஸ்' கூறுகின்றார்.
மனிதனின் ஒழுக்கக் கேட்டால் உலகையே உலுக்கிக் கொண்டிருக்கின்றது (H.I.V) எயிற்ஸ் நோயின் மூல காரணிகள்.
2000ஆண்டில் H.I.H.வைரசால் பாதிக்கப்பட்டவர்கள் 3கோடியிலிருந்து 4 கோடியாக இருப்பர் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது.
மண்ணில் மனிதத்தைப் பாதுகாக்கவேண்டிய மதங்கள் ஆயுதப் போராட்டத்தைத் தூண்டி விடுவதில் பெரும்பங்கு வகிக்கின்றன.

நாள்தோறும் நாம் காண்கின்ற சம்பவங்களும், கேட்கின்ற செய்திகளும் இந்த மண்ணில் மனிதம் என்பது பேச்சுக்கும், கவிதைக்கும், கதைகளிற்குக் கருப்பொருளாய் இருப்பதற்குமட்டுமே பாவிக்கப்படுகின்ற ஒன்றாகத்தான் உணர முடிகின்றது.
மண்ணை ஆள்வதற்காய் கொன்றுகுவிக்கப்பட்ட மனிதத்தின் எண்ணிக்கை எண்ணில் அடங்காதது.
நெறிகெட்ட அரசியலினால், தனிமனித விருப்பங்களை அதிகார பூர்வமாக மக்கள்மீது திணிப்பதனால், மதவாதிகளால், சுயநல மிருகியால், பேராசையால் இந்த மண்ணில் மனிதம் மிதிக்கப்படுகின்றது.
மனிதன் சுவாசிக்கச் சுத்தமான காற்றில்லை. ஓசோனில் ஓட்டை, மாமிசம் அத்தனையிலும் நோய், மரக்கறிகளில் இரசாயனம், போதை வஸ்துக்கள் துஸ்பிரயோகம், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஓரினப்புணர்ச்சி பெண்ணடிமைத்தனம் இத்தனையும் விஸ்வரூபம் எடுத்து நிற்கும் மண்ணில் மனிதம் வாழ்வது எப்படி?
□□□

பூவரசு 7வது ஆண்டு நிறைவுப்போட்டியில்
இரண்டாவது பரிசுபெற்ற கட்டுரை.

---

## முள்ளும் மலரும்.

ரோஜாச் செடியில் இருந்த முட்களைப்
பார்த்து காற்றுக் கேட்டது.
"முட்களே! நீங்களும் பூக்களைப்போல் அழகாக இருக்காது
முட்களாக இருந்து குத்துகிறீர்களே!ஏன்?"
"அழகான, நறுமணம் வீசும் இந்தப் பூக்களும் மொட்டுக்களும்
விலங்குகளினால் சுதந்திரம் பறிபோகாது
பாதுகாக்கப்படவேண்டுமானால் நாங்கள் முட்களாகவே
இருக்கவேண்டும்" என்று முட்கள் சொல்லின.

அடுத்தவர் வாழ-சிலர்
கொடுப்பார் தம்வாழ்வை.

குப்பிளான் வை.யோகேஸ்.



(20ம் பக்கத்தொடர்ச்சி)

□ தமது சொந்தச்சௌகரியங்களுக்காக மனிதக்கூட்டத்துடன் தொடர்பற்று, மக்களை ஒன்று திரட்டும் கருத்துக்களின் பாதிப்புக்கும் அப்பால் தனிநபர் சென்றால்,அவன் மந்தபுத்தியுள்ளவனாகவும், பழமைவிரும்பியாகவும், வாழ்க்கையின் முன்னேற்றத்துக்குப் பகைவனாகவும் போய்விடுகின்றான் என்றும் கூறியுள்ளார்.

இவற்றிலிருந்தெல்லாம் நாம் புரிந்துகொள்ளவேண்டியது மக்களைத் தவிர உயர்வான படைப்பு உலகில் இல்லையென்பதும் அவர்களுடைய மேன்மைக்காகவே எல்லா மக்களும் பணியாற்ற வேண்டும் என்பதுமாகும்.
ஆகவே எழுத்தாளனது பங்களிப்பும் மனித மேம்பாட்டையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது என்பது தெளிவானவிடயம்.

மக்களுக்கான இலக்கியப் படைப்புக்கள் வெறுமனே யதார்த்த நிலைப்பாட்டில் வெளிப்படுத்தப்படாமல், அதிசிறந்த கலையழகோடு பிரசவிக்கப்படவேண்டும் என்பது மார்க்ஸிய எழுத்தாளர்களின் அங்கலாய்ப்பு. அதேவேளை புரட்சிகரக் கருத்துக்குத் தம்மை அர்ப்பணித்திருந்தபோதும், சில எழுத்தாளர்களால் கலைநயத்துடன் அக்கருத்துக்களைப் பிரசவிக்க முடியாத நிலைப்பாடு இருப்பது துரதிர்ஷ்டமாகும். அவர்களது படைப்புக்களில் பிரசாரத் தொனியே முன்நிற்கின்றது.அதேசமயம் புரட்சிகரக் கருத்துக்களை விரும்பிஏற்காத சிலஎழுத்தாளர்கள்,தங்களை அறியாமலேயே தமது எழுத்துக்களில் புரட்சிகரமான சிந்தனைகளைப் பிரதிபலிப்பதையும் காண்கின்றோம்.

கலைத்துவம் என்பது ஒரு எழுத்தாளனுடைய அகவுணர்வுகளின் விகசிப்பு ஆகும். இந்தச்சிறப்பு ஒரு முற்போக்கு எழுத்தாளனுக்கு வாய்க்கப் பெற்றால் அது பெரும்சிறப்பு ஆகும். எழுத்துலகம் என்று தொடங்கியதோ, அன்றிலிருந்தே எழுத்தாளர்களும், விமர்சகர்களும், அழகியல்வாதிகளும், இலக்கியம் என்பது சமுதாயத்தின் ஒரு செல்நெறிச் சாதனம் என்ற கருத்தைக் கொண்டிருந்தபோதிலும், கலை,கலைக்காகவே என்ற கருத்துத் தொடர்ந்து கொண்டே இருப்பதையும் நாம் காண்கிறோம். எப்படியிருந்த போதிலும், எழுத்து காலத்துக்குக் காலம் விரிவடைந்துகொண்டு வருவது மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆனால் இந்த விரிவாக்கத்தினூடே.— அதாவது, மக்களுடைய மேம்பாட்டுக்காகவே இலக்கியம், கலையுணர்வுகளை வெளிப்படுத்தவே இலக்கியம் என்ற மாறுபட்ட கோட்பாடுகளுக்கிடையிலும், இலக்கிய உலகில் பாரிய சரிவுநிலை ஏற்பட்டுக்கொண்டிருப்பதை நாம் கவனத்தில் எடுக்கக் கடமைப்பட்டுள்ளோம். அது யாதெனின்,எழுத்துக்கும் எழுத்தாளனுக்கும் இடையில் இருக்கவேண்டிய உறவு எத்தகையது? என்ற கேள்வியின் அடிப்படையில் எழுந்ததாகும்.
எழுத்தாளன் என்பவன், தன் எழுத்துக்கும் வாழ்வுக்குமிடையில் எவ்வித வேறுபாடுமில்லாமல் இருக்கவேண்டும் என்பது ஓர் அடிப்படைக்கொள்கை. அதாவது எழுத்தாளன் நேர்மையானவனாய் இருக்கவேண்டும் என்பதாகும்.

இது ஒன்றும் புதிய கருத்தல்ல. மனித குலம் தோன்றிய காலத்திலிருந்தே விதைக்கப்பட்டு வரும் விதைதான்.

எந்த மனிதனும் நேர்மையாக வாழவேண்டும் என்பதற்காகவே. சின்னவயதிலிருந்தே எமது பெற்றோராலும், ஆசிரியர்களாலும் நேர்மை நமக்குப் போதிக்கப்பட்டு வருகின்றது. சாதாரணமனிதனே நேர்மையாக வாழவேண்டுமென்பதுதான் மானுடக் கோட்பாடு. அப்படியிருக்கும்போது இலக்கியவாதி அதனை இறுக்கமாகக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டவன் என்பதைச் சொல்லவேண்டியதில்லை. அதைக் கடைப்பிடிக்காவிட்டால் அவன் படைக்கும் இலக்கியத்துக்கே அர்த்தமில்லாமல் போய்விடும். இலட்சியத்திலிருந்தே இலக்கியம்தோன்றியது என்று சிலர் கருத்து முன்வைத்துள்ளனர். அப்படியிருக்கும்போது, இலக்கியவாதி எழுத்து வேறு வாழ்வு வேறு என்று கருத்துக்கொள்வானாகில் சாதாரணமக்களைச் சுரண்டிப்பிழைக்கும் சுயநலவாதிகளைவிட அவன் கொடியவனாகின்றான்.

எழுத்துலகில், மக்கள் மேம்பாட்டுக்காகப் பேனா ஓட்டும் முற்போக்கு எழுத்தாளர், அழகியல் உணர்வுகளுக்காகப் பேனா ஓட்டும் கலைத்துவ எழுத்தாளர் என்றபிரிவுகளுக்குமப்பால் பலவித எழுத்தாளர்கள் இருக்கின்றார்கள். செக்ஸ் கோலங்களை விண்டுரைப்பவர்கள், மர்மங்களைத் துலக்குபவர்கள், கண்டு கேட்டறிந்த அனுபவங்களையும் தமது மன உணர்வுகளையும் வெளிப்படுத்த எழுதுபவர்கள், பணத்துக்காகப் பேனா ஓட்டுபவர்கள், காதல் உணர்வுகளை வெளிப்படுத்துபவர்கள், எனப் பலவகையினர். எல்லோரும் மானுடரே!

இந்த மானுடர்களும் நேர்மையானவர்களாகவே வாழவேண்டும்.

எழுதத்தெரிந்த இந்தப் படித்தகூட்டத்தில் — சிந்திக்கத் தெரிந்த கூட்டத்தில், இந்த நேர்மைக் கொள்கையை, யார் கடைப்பிடிக்கத் தவறினாலும், முற்போக்கு எழுத்தாளர் — மக்கள் எழுத்தாளர் — புரட்சிஎழுத்தாளர் என்று அழைக்கப்படுகின்ற எழுத்தாளர்கள் அனைவரும் கட்டிறுக்கத்தோடு கடைப்பிடிக்கவேண்டும்.

ஏனென்றால் இவர்கள் அனைவரும் சமூக முன்னேற்றத்துக்கும், மக்கள் மேம்பாட்டுக்குமாகப் பேனா ஓட்டுபவர்கள் எனப் பெயர் படைத்தவர்கள்.

மகாகவி பாரதியின் இரண்டு பாடல்களை நாம்கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒன்று —

நல்லதோர் வீணைசெய்தே — அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி! — எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்.
வல்லமை தாராயோ — இந்த
மானிலம் பயனுற வாழ்வதற்கே!
சொல்லடி சிவசக்தி! — நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?



மற்றது —

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப் போல்
கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.

எழுத்தாளன் சாதாரண மனிதனல்லன். அவன் புத்தி ஜீவி. அறிவுக் கூர்மை நிரம்பப் பெற்றவன். ஆற்றலுள்ளவன். இந்தத் தகைமைகளை எழுத்தினூடாகப் பாய்ச்சித்தான் அவன், சமூக அழுத்தங்களினால் நசுங்குண்டிருக்கும் மக்களுக்கு விடிவை ஏற்படுத்தவேண்டும். இதைத்தான் பாரதி, இந்த மாநிலத்தோர் பயனுற வாழச்செய்வதற்கான பணியை — எழுத்துப் பணியை நான் திறம்படச்செய்ய எனக்கு வல்லமையைத்தா!" என்று சக்தியைக் கர்வத்தோடு வேண்டுகிறான். அத்துடன் உள்ளத்திலே தூய்மை இல்லாவிட்டால் ஒருத்தனின் எழுத்திலே ஒளியிருக்கமாட்டாது, ஒளிவீச்சில்லையென்றால், பள்ளத்திலேவீழ்ந்திருக்கும் குருடருக்குப் பார்வை கிடைக்கவே மாட்டாது,என்றும் வலியுறுத்திக் கூறுகின்றான்.

'வாளினும் வலியது பேனா!' என்ற வார்த்தையைக் கேட்டதும் ஓர் எழுத்தாளனின் நெஞ்சு திமிர்கொள்ளுகின்றது. அக்கிரமங்களை வெட்டிச் சாய்க்கும் அந்தப் பலமான ஆயுதம் அவன் கையில் இருப்பதே இதற்குக் காரணம். ஆனால், அக்கிரமங்களைச்செய்துகொண்டு அதைத்தட்டிக் கேட்பவனை அந்த ஆயுதத்தால் வெட்டிச்சாய்க்க முற்படும் நிலைமையே தோன்றியுள்ளது! இதை எண்ணி நாம் வெட்கப்படவேண்டும்!

'ஊருக்குபதேசம், உனக்கல்லடி!' என்ற கிண்டல் பழமொழிக்கிணைவாக, எழுத்தாளன் பேனா ஓட்டக்கூடாது. நான்கு ஐந்து தசாப்தங்களுக்கு முன் வீறுகொண்டெழுந்த நமது ஈழத்திலக்கியம், எழுத்தாளர்களிடம் தலைதூக்கியுள்ள சுயநல-சந்தர்ப்பவாதப் போக்குகளின் தாக்கத்தினால் வேகம் குன்றிப் பின்னடைவு கொண்டுள்ளது. புதிய நூற்றாண்டின் ஆரம்பத்தோடு இச் சீரழிவுத்தன்மைகள் அகற்றப்பட்டு நமது இலக்கியம் முன்னேறிச்செல்ல வழிபிறக்கவேண்டும்!

□□□

## பிரார்த்தனை!

'இப்ராஹிம் பின் அத்ஹம்' ஒரு இஸ்லாமிய மகான். மன்னராக இருந்து துறவியானவர் அவர்.
ஒருநாள் தனது சீடர்களுடன் அவர் ஒரு வெளியூர்ப் பயணத்தை மேற்கொண்டார்.
வழியில் ஒரு பள்ளிவாசலில் அவர்கள் தங்கநேரிட்டது.
அது கொஞ்சம் பழைய கட்டிடம். அதிலிருந்த ஒரு துவாரத்தின் மூலம் வீசிய பனிப்புயல் உள்ளே தங்கியிருந்தவர்களைப் பாதித்தது.
அவர்கள் குளிரைத்தாங்கமாட்டாது உடல்சுருண்டு அவதிப்பட்டார்கள்.
உடனே மகான் எழுந்துபோய் அந்தத் துவாரத்துக்கு மறைவாக தனது முதுகைவைத்தபடி நின்று கொண்டார்.
பனிப்புயல் பாதிப்பை அவர் ஒருவரே தாங்கிக்கொள்ள மற்றவர்கள் அமைதியாகத் தூங்கினார்கள்.
அப்படி அவர் நின்றதனால் அவரது வழக்கமான பின்னிரவு நேரத் தொழுகை தடைபட்டுப் போய்விட்டது.
அந்த உறுத்தலில் இரண்டுநாள் இறைவனிடம் தொழுகை தவறி விட்டதைப்பற்றி சொல்லி வேதனைப்பட்டார் அவர்.
இரண்டாம்நாள் ஒரு அசரீரி அவருடைய காதில் கேட்டது.
"இப்ராஹிம்! இரண்டு நாட்களுக்கு முன் நீர் செய்த பின்னிரவுத் தொழுகை கடவுளுக்கு ரொம்ப பிடித்துப்போய்விட்டது."
"ஐயோ! அன்று நான் தொழவே இல்லையே!" என்றார் இப்ராஹிம்.
"அன்று நீர் செய்த சேவையே இறைவனுக்கு மிகவும் பிடித்த தொழுகை!" என்றது அசரீரி.

●


**முத்துமாலை**
**வீடியோ மலர் வெளியீடு**


பூவரக கலை இலக்கியப் பேரவையின், புலம்பெயர் தமிழர்களின் கலை முயற்சிகளுக்கு உற்சாகமூட்டுதல்– ஆதரவளித்தல் என்னும் நோக்கத்திற்கேற்றாற்போல, கடந்த மார்ச் 15ம் திகதி நூலகக் கண்காட்சியில், பிறேமன் முத்துக்கள் மூன்றின் முத்துமாலை வீடியோ மலர் வெளியீட்டுக்கு பேரவையானது களம் அமைத்துக் கொடுத்தது.

இம் மலரானது மூன்று சிறுவர்களின் முன்னெடுப்பில் பல அம்சங்களை காலத்தின் தேவைக்கமைய உள்ளடக்கியுள்ளது.

மேற்படி வீடியோ மலரைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

MM Video Movies,
C/O Mas. Jakan Kulathasan,
Amsterdamer Str 29,
28259 Bremen, Germany.
Tel; 0421- 589625


**கந்தசாமி. ஜெயக்குமார்**
[கண்ணன் மாஸ்டர்]
நயினாதீவு, இலங்கை.



# நினைவாஞ்சலி!

ஓராண்டாயிற்று
உன்னைப் பிரிந்து!
ஆனாலும்–
நினைவுகள் நீங்குவதில்லை.
மரணம் மனிதர்களைப் பிரிக்கலாம்.
ஆனால்
பழகிய உறவுகளைப் பறிப்பதற்கு
மரணத்தால் முடியாது.
எங்கள் நினைவுகளில்
நிறைந்து போனவன் நீ!
எங்கள் இதயத்துடிப்பு உள்ளவரை
நீயும் எங்களுடன் வாழ்கிறாய் என்பதே நிஜம்.

–நண்பர்கள்.

03. 04. 1955 — 03. 05. 1997


# வாசகர் அரங்கம் '98

நூலகக் கண்காட்சி

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL) - 909/09



பூவரசு 50வது இதழ் வெளியீடு.



**பூவரசு கலை இலக்கியப் பேரவையின்
நூலகக் கண்காட்சியிலிருந்து.....**



'பௌவனமில்லாத
யதார்த்தங்கள்'
நூல் வெளியீடு.